2017 மார்ச் 23
வியாழன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஐ.ஆகிர் பிறை 23 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 048

NAVAMANI DAILY
நவமணி දිනපතා
QD / 154 / NEWS / 2017

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



மோதலின் மூலம் பாதிப்படையாத ஒருவர் கூட இல்லை
04»



டெஸ்ட் தரப்படுத்தலில் 3ஆம் இடத்தில் ஹேரத்
12»

மனித வலு முறைமை என்பது என்ன?
09»



# 52% பெண்களுக்கு 5% பிரதிநிதித்துவம்

மஹிந்த தேசப்பிரிய கவலை

■ பா.மலரம்பிகை



இலங்கையின் மொத்த சனத் தொகையில்52% வீதமானவர்கள் பெண்களாக இருந்தும் பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவம் 5% வீதமாகவே இருக்கின்றதாகவும், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பிரமிட் வடிவில்
11 »»»»

# தமிழ் இளைஞர்கள் உள்ளிட்ட 551 பேர்

## கோத்தாவின் உத்தரவில் கொலை

### அமைச்சர் மனோ பரபரப்பு குற்றச்சாட்டு



பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உண்மைக்கு புறம்பான விடயங்களை கூறினாலும் கொழும்பில் தமிழர்களை வெள்ளை வேன்களில் கடத்தியவர்களுக்கு ஆணையிட்டவர் அவர்தான் என்பதை நான் அறிவேன் என தேசிய கலந்துரையாடல் சகவாழ்வு மற்றும் அரச கரும் மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் நேற்று தெரிவித்தார். அதற்கமையவே கடந்த காலங்களில் கொழும்பில் 551க்கும் மேற்பட்ட தமிழர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

புதிதாக செப்பனிடப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கொழும்பு கதிரேசன் வீதியினை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டதன் பின் இங்கு பேசிய போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார், அவர் மேலும் கூறியதாவது,

தற்போது முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் மற்றும் அமைச்சர்,
11 »»»»

## கொழும்பு பெண்கள் பாடசாலைகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு

■ பா.மலரம்பிகை

கிரிக்கெட் போட்டிகளின் நிமித்தம் வீதிகளில் தேவையற்ற வகையில் கூடும் பாடசாலை மாணவர்களுக்கு எதிராகவும்,
11 »»»»

## விமல் சிறையில் உண்ணாவிரதம்

■ பா.மலரம்பிகை

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வெலிக்கடை மகசீன் சிறைச்சாலையில் நேற்றையதினம்
11 »»»»

## உண்ணாவிரதமிருக்கும் விமலின் சட்டைபையில் லெமன்பப்?

■ அ.அருண் பிரசாந்த்

சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான
11 »»»»





சர்வதேச நீர்தினத்தினை முன்னிட்டு நேற்று கொழும்பு தாமரைத் தடாகத்தில் இடம்பெற்ற பிரதான நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பின் தலைவர் கே. ஏ. அன்சார் உபதலைவர் ஷபீக் ரஜாப்தீன் ஆகியோர் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்குவதைப் படங்களில் காணலாம்.

## கிண்ணியா வைத்தியசாலை நிரந்தர கட்டிடங்களுடன் அபிவிருந்தி செய்யப்படும்





■ சுஐப்.எம்.காசிம்
■ சஹ்ரின் இஸ்மத்

கிண்ணியா வைத்திய சாலையை நிரந்தர கட்டிடத்தில் தரமான வைத்தியசாலையாக ஆக்குவதற்கு சுகாதார அமைச்சர் டாக்டர்
11 »»»»

## லசந்த, வசீம் படுகொலைகள்:

# வழக்குகளை மூடி மறைப்பதற்கு அரசு முயற்சி

### அநுர குமார குற்றச்சாட்டு



■ அ.அருண் பிரசாந்த்

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க, றகர் வீரர் வசீம் தாஜுதீன் உள்ளிட்ட சர்ச்சைக்குரிய படுகொலை வழக்குகளை மூடிமறைப்பதற்கு அரசு தீவிரமாக முயற்சிக்கின்றது என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவும் ஜே.வி.பியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க குற்றம்சாட்டினார். அத்துடன், முன்னாள்
11 »»»»

## லசந்த கொலை;

### பன்றிகளை கொல்லும் கூரிய ஆயுதம் பயன்படுத்தப்பட்டுள்ளது



### சுஜீவ சேனசிங்க

■ அ.அருண் பிரசாந்த்

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மரணம் தொடர்பில் வெளியாகியுள்ள மரண அறிக்கைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள அரசு தயாராகவே இருக்கின்றது என்று இராஜங்க அமைச்சரான சுஜீவ சேனசிங்க தெரிவித்தார். மேலும் இப்படுகொலையின் பின்னணியில் ராஜபக்ஷாக்களே இருக்கின்றனர் என்றும் இச்சம்பவம் இடம்பெற்ற வேளையில் இதனை பெரிதுபடுத்த வேண்டாம் என்று ராஜபக்ஷாக்களினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என்றும் அவர் கூறினார். சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பிலான விசாரணை கடந்த திங்களன்று கல்கிசை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது. கல்கிசை பிரதான நீதவான் முஹம்மட் மிஹால்
11 »»»»

## ஹிரிப்பிட்டியில் முஸ்லிம் விரோத சுவரொட்டிகள்

குருநாகல் - வெல்லவ ஹிரிப்பிட்டிய நகரில் முஸ்லிம்களுக்கு எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. முஸ்லிம்களுக்கு காணி வழங்க வேண்டாம், முஸ்லிம் கடைகளுக்கு போக வேண்டாம் போன்ற விடயங்களை உள்ளடக்கி நகரில் பல இடங்களிலும் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. 'மஹாசொவன பலகாய குருநாகல்' என்று பெயரிடப்பட்டே இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இப்பத்திரிகை அச்சுக்கு போகும் வரை சுவரொட்டிகளை அகற்ற எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.



நவமணி

www.facebook.com/NavamaniOfficial

# 12 ஆயிரம் புலிகளை மன்னிக்க முடியுமென்றால் ஏன் படையினரை மன்னிக்க முடியாது?

## திகாமடுமலை எம்.பி. விமலவீர திசாநாயக்க



(ஐ. எம்.ஏ. முஹம்மட் உவைஸ்)

படையினர் யுத்தக் குற்றம் புரிந்திருந்தால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும். 12 ஆயிரம் புலிகள் மன்னிக்கப்பட்டு அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கி அவர்கள் விடுதலை செய்யப்பட்டமை சரி என்றால் ஏன் படையினருக்கு அவ்வாறு மன்னிப்பு வழங்க முடியாது?

இவ்வாறு மஹிந்த தரப்பின் திகாமடுமலை மாவட்ட எம்பியும் கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சருமான விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

படையினர் யுத்தக் குற்றங்கள் புரிந்தனர் என்று அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அது உண்மை இல்லை. யுத்த களத்தில் இருந்த படையினரின் மனோ நிலையை நாம் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பாரிய போர்க் குற்றங்கள் புரிந்த புலிகள் 12 ஆயிரம் பேரை மஹிந்த அரசு புனர்வாழ்வளித்து விடுதலை செய்தது. அவர்கள் செய்த குற்றங்களை மன்னித்தது. அரந்தலாவை பிக்குகள் கொலை, தலதா மாளிகை மீது குண்டு தாக்குதல், அப்பாவி பொது மக்களை கொலை செய்தமை மற்றும் மத்திய வங்கி மீது தாக்குதல் என ஏகப்பட்ட குற்றங்களை புலிகள் புரிந்தனர்.

இப்படிப்பட்ட புலிகளை மன்னித்து விடுதலை செய்ய முடியும் என்றால் படையினர் போர்க் குற்றங்கள் செய்திருந்தால் ஏன் அவர்களை விடுதலை செய்ய முடியாது?

படையினரை விசாரிப்பதற்கு சர்வதேச ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை புலி ஆதரவாளர்கள் முன்வைக்கின்றனர். அப்படியென்றால் புலிகள் நிகழ்த்திய அத்தனை கொலை சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்துவதற்கு தனித்தனியான சர்வதேச விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்றார்.

# கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டம்



(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாண சபைக்கு முன்னால் தொண்டர் ஆசிரியர்கள் நேற்று (22) பிற்பகல் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்ட 445 தொண்டராசிரியரின் நிரந்தர நியமனத்தை பெற்றுத்தருமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

20 வருடங்களுக்கு மேலாக நிரந்தர நியமனத்திற்காக பல போராட்டங்களின் பின்னர் மத்திய அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 445 தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனத்திற்கு அங்கிகாரம் வழங்கி இரண்டு மாதங்களையும் தாண்டி இன்றுவரை கிழக்கு மாகாண கல்வியியல் சார் அதிகாரிகளோ கிழக்கு மாகாண கல்வி அமைச்சரோ எந்தவிதமான நடவடிக்கைகளிலும் இறங்காமல் இருப்பது பாரிய கவலையையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை இந்த தொண்டராசிரியர்களின் பெயர்ட்டியல் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபாணியினால் 2007ம் ஆண்டு அதாவது இறுதியாக நடைபெற்ற நேர்முகப்பரீட்சைக்கான கடிதத்தின் பிரதியின் அடிப்படையில் உண்மையான 445 தொண்டராசிரியர்களின் பெயர்கள் இணங்காணப்பட்டு கிழக்கு மாகாண அமைச்சரவையின் அனுமதியைப்பெற்று மத்திய அரசின் அனுமதிக்காக கல்வி அமைச்சர் அகில விறாஜ் காரியவசம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு ஓரிரு மாதங்களில் அனுமதி பெறப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

மத்திய அரசினால் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ள 445 கிழக்கு மாகாண தொண்டராசிரியர்களையும் உடனடியாக நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து தகுதியானவர்களை இனங்கண்டு அவர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கிழக்கு மாகாண தொண்டராசிரியர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## தர்காநகரில் பாராட்டுவிழா

(பேருவளை நிருபர்)

தர்காநகர் அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையின் அதிபராக, ஆசிரியராக பதவி வகித்து ஓய்வுபெற்ற பிர்தௌஸியா பாஸியின் கல்விப் பணிகளை கௌரவிக்கும் வகையிலான பாராட்டுவிழா வைபவம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையில் நடைபெறும்.

தர்காநகர் முஸ்லிம் மாதர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வுக்கு அதன் தலைவரும் ஓய்வுபெற்ற பிரதி கல்விப் பணிப்பாளருமான நூருல் பாக்கியா கரீம் தலைமை வகிப்பார்.

# ஒலுவில் அல் மதீனா விளையாட்டு விழா

(ஒலுவில் நிருபர்)

ஒலுவில் அல்-மதீனா வித்தியாலயத்தில் முதலாவது இல்ல விளையாட்டுப்போட்டி அதிபர் கே.எல். அமீர் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை) மிக விமர்சையாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெவ்வை கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். விஷேட அதிதிகளாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான ஏ.எல்.எம். தவம், ஆரிப் சம்சுதீன் ஆகியோர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக விளையாட்டுக்குழு செயலாளர் எம்.ஜே.எம். அன்வர் ஆசிரியர் தெரிவித்தார்

இந் நிகழ்வு 2017.03.24 வெள்ளிக்கிழமை, பி.ப. 2.30 மணிக்கு அல்-மதீனா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் இல்ல விளையாட்டுப் போட்டியில் ஆயிஷா, ஹப்ஷா, ஷைனப் ஆகிய இல்லங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து சிறப்பிக்கவிருக்கின்றனர்.

## அபிவிருத்திக்குழு உறுப்பினராக எஸ்.ஏ.ஏ. முனாசுடீன் தெரிவு



(எம்.எஸ்.சம்சுல் ஹுதா, பொத்துவில்)

2017ம் ஆண்டுக்கான பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுத் தலைவராக சட்டத்தரணி எஸ்.ஏ. ஏ.முனாசுடீன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். வைத்திய அத்தியட்சகர் டீ.எல்.மனாப் தலைமையில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழு மீளமைப்பின் போதே எவ்வித போட்டியுமின்றி தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக எம்.ஐ.முஸ்தக்கீர், பொருளாராக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.நிம்சாத் அலி, உப செயலாளராக எம்.எஸ்.முகம்மட் அஸ்ரப் இணைப்பாளராக ஓய்வுபெற்ற கிராம நிலதாரி எம்.ஏ.சீ.அப்துல் அஸீஸ், தகவல் தொடர்பாடலுக்கு பொறுப்பாக எமது செய்தியாளர் எம்.எஸ்.சம்சுல் ஹுதா, நிருவாகத் தொடர்பிற்கு ஏ.ஜி.அமானுல்லா, நிதிதிரட்டலுக்கு பொறுப்பாக ஏ.முகம்மட் முன்சித் மற்றும் எஸ்.எம்.முகம்மட் தமீம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் நிருவாக உறுப்பினர்கள் 13 பேரும் தெரிவு செய்யப் பட்டனர்.

# முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தை மூன்று வலயங்களாகப் பிரிப்பதற்கு ஏற்பாடு

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் அதன் கம்பஹா மாவட்ட சம்மேளனத்தை அத்தனகல்லை, நீர்கொழும்பு, மல்வானை ஆகிய மூன்று வலயங்களாகப் பிரிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

திஹாரி, கஹட்டோவிட்ட பஸ்யால, கல்-எலிய, மற்றும் அதனை அண்மிய பகுதிகளை உள்ளடக்கிய அத்தனகல்ல வலயமாகவும், நீர்கொழும்பு, மினுவாங்கொடை, வத்தளை, மாபோலை மற்றும் அதனைச் சேர்ந்த பகுதிகளை நீர்கொழும்பு வலயமாகவும், மல்வானை, பூகொடை மற்றும் அதனை அண்மிய பகுதிகளை மல்வானை வலயமாகவும் தனித்து செயல் படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று வலயங்களுக்குமான அமைப்புக்கள் உருவாக்கப்பட்ட பின்னர் அவற்றின் உத்தியோகத்தர்களைக் கொண்டு கம்பஹா மாவட்ட சம்மேளனம் அமைக்கப்படும்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசிய தலைவர் கலாநிதி அல்ஹாஜ் பீ.எம் பாரூக் தலைமையில் அண்மையில் திஹாரியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம் ஒன்றின்போது இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சம்மேளனத்தின் உப தலைவர் அல்ஹாஜ் அஸாம் பாக்கீர் மாக்கார், பொதுச் செயலாளர் எம்.அஜிவதீன் உட்பட மாவட்டத்தின் முக்கிய பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இதன் முதற் கட்டமாக அத்தனகல்ல வலயத்துக்கான சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் தலைவராக அல்ஹாஜ் ஏ.டபிள்யூ.எம் ஸப்ரி, உப தலைவராக எம்.எச்.எம் றியாஸ் செயலாளாராக சட்டத்தரணி எம்.எச்.எம் அஸ்லம், பொருளாளராக அஷ்ஷெய்க் அப்துல் முஜிப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள். மேலும் அத்தனகல்ல வலயத்தின் சகல பகுதிகளையும் உள்ளடக்கியதாக 8 பேர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

கம்பஹா மாவட்ட அமைப்பாளர் பியாஸ் முஹம்மதின் ஏற்பாட்டில் இக் கூட்டம் நடைபெற்றது.





டெங்குகாய்ச்சலினால் பாதிக்கப்பட்டு கிண்ணியா தள வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் நோயாளர்களை நேற்று கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் பார்வையிற்றுநோயாளிகளிடம் சுகம் விசாரித்தார்.

(கிண்ணியா ஸஹ்றின் எம் இஸ்மத் ஈஎம்.டி.எம். பாரீஸ் )

# அமைச்சர் பைஸர் முஸ்தபாவினால்

## டெங்குவினால் மரணமடைந்த குடும்பத்தினருக்கு இழப்பீடு



( கிண்ணியாவிலிருந்து மினுவாங்கொடை நிருபர் )

கிண்ணியாவில் டெங்கு நோய் பரவலைத் தடுக்கும் வகையிலான கலந்துரையாடல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா தலைமையில், கிண்ணியா நகர சபை பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று (22) புதன்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் யூ.எல்.எம். அஸீஸ், கிழக்கு மாகாண உள்ளூராட்சி பதில் ஆணையாளர் ஏ.ஜே.எம் இர்ஷாத், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். சுதாகரன், கிண்ணியா நகர சபை செயலாளர் எம்.ஜே. எம். அன்வர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். கே. வஸீர் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, முப்படைகளின் தளபதிகள், வைத்திய உயர் அதிகாரிகளும் பங்குபற்றினர்.

கிண்ணியா பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், இதனை மேலும் பரவ விடாமல் கட்டுப்படுத்தும் நோக்கிலான பல்வேறு முன்னோடி நடவடிக்கைத் திட்டங்கள் தொடர்பாகவும் அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் தலைமையில் இக் கலந்துரையாடலின்போது விரிவாக ஆராயப்பட்டது.

கிண்ணியா தள வைத்திய சாலையிலுள்ள குறைபாடுகள் தொடர்பிலும் இதன்போது ஆராய்ந்த அமைச்சர், வைத்திய சாலையின் குறைபாடுகளை உடன் நிவர்த்தி செய்யுமாறும் சகல நிர்வாக அரச அதிகாரிகளையும் பணித்தார்.

இக் கலந்துரையாடலின்போது, கிண்ணியா நகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் நோக்குடன் கருத்திட்டம் ஒன்றும் கிண்ணியா நகர சபை செயலாளரினால் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

டெங்கு நோயினால் மரணமடைந்த குடும்பத்தினருக்கான இழப்பீட்டுத் தொகைகளும் அமைச்சரினால் இதன்போது வழங்கப்பட்டன.

கிண்ணியா தள வைத்திய சாலையில் டெங்கு நோயாளார்கள் ஒரு கட்டிலில் இருவர் மற்றும் மூன்று பேர் என்ற அடிப்படையிலும் சில நோயாளிகள் இடமின்றி தரையிலும் சிகிச்சை பெற்று வருவதாகவும் விசேடமாக இங்கு அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

இதுவரை, கிண்ணியா பிரதேசத்தில் மாத்திரம் டெங்கு நோய் தாக்கத்தினால் 14 பேர் மரணமடைந்துள்ளதாகவும் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் இத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது அதிகாரிகளினால் அமைச்சரிடம் சுட்டிக்காட்டப் பட்டது.

# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிரான 5 வழக்குகள் விசாரணைக்கு

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிரான 5 வழக்குகள் எதிர்வரும் மே மாதம் முதல் விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளன.2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் தொடர்பான விபரங்களை வெளியிடவில்லை என்ற குற்றச்சாட்டில் இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.இலஞ்ச ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழு இந்த வழக்குகளை தொடுத்துள்ளது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் மே மாதம் 26 ஆம் திகதி முறைப்பாட்டாளர் தரப்பின் சாட்சியாளர்களை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டார உத்தரவிட்டுள்ளார்.

## இன்று உலக வானிலை தினம்

உலக வானிலை தினம் இன்று (மார்ச் 23) வியாழக்கிழமை கொண்டாடப்படுகிறது. இத்தினம் 1950ஆம் ஆண்டுமுதல் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான வானிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 23ஆம் திகதி உலக வானிலை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்று (வியாழக்கிழமை) வானிலை தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

உலகின் தட்பவெப்பநிலை உயர்வால் கடலின் நீர்மட்டம் உயர்கிறது. தற்போது பூமியின் வெப்பநிலையும் கூடிக்கொண்டே செல்கிறது. இதனை அடுத்து வரும் தலைமுறைக்கு வானிலையை சாதகமாக மாற்றிக்கொடுப்பது மனிதர்களின் கடமையாகும்.

ஒவ்வொரு வருடமும் இத்தினத்தில் வானிலை தொடர்பில் ஏற்படும் முக்கிய மாற்றங்கள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படுகின்றது. காலநிலை மாற்றத்தில் அதிக வெப்பநிலை உலகில் பல பகுதிகளிலும் பெரும் அச்சுறுத்தல்களையும், மக்களுக்கு பாரிய கஷ்டங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

**தொழுகை நேரங்கள் - (23.03.2017)**

சுபஹ் - 4.59
ளுஹர்- 12.19
அஸர் - 3.31
மஃரிப் - 6.21
இஷா - 7.31

# கல்குடாவில் மதுபான தொழிற்சாலை திறக்க இடமளிக்க மாட்டோம்

## ஸ்ரீல.சு.க.இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார



பர்பசுவல் ட்ரஸ்ரீஸ் நிறுவனத்தினால் கல்குடா பிரதேசத்தில் மதுபானம் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், அதற்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவரும், முன்னாள் பிரதி அமைச்சருமான சாந்த பண்டார தெரிவித்தார்.

ஸ்ரீல.சு.க. தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்த தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு நாம் இடமளித்தோம் என்றால், யாழ்ப்பாணத்தில் பனை சாராய கைத்தொழிலினால் உழைக்கும் மக்களின் வாழ்வாதாத்தில் பாதிப்பு ஏற்படும். அந்த கைத்தொழிலில் உழைக்கும் மக்கள் தற்போது நிதி அமைச்சின் தவறான தீர்மானத்தினால் பாதிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பண மோசடி சம்பந்தமாக பர்பசுவல் ட்ரஸ்ரீஸ் நிறுவனத்திற்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அந்நிறுவனத்திற்கு வரி நிவாரணம் உட்பட அனைத்து வசதிகளையும் பெற்றுகொடுத்து யாழ்.மக்களின் கைத்தொழிலினை வீழ்ச்சியடைய செய்வதற்கு நிதி அமைச்சு மற்றும் கலால் திணைக்களம் செயற்படுவது சிக்கலாகவே உள்ளது.

யாழ்ப்பாணத்து மக்கள் கேட்பது, பெடரல்,வீட்டு வசதிகள், பொலிஸ் வசதிகள் அன்றி தமக்கு ஏற்படும் இவ்வாறான சிக்கலுக்கு நிரந்த தீர்வினையே ஆகும்.

நிதி அமைச்சு தற்போதும் பனை சாராயத்துக்கு அதிக வரியை அறவிடுவதோடு, வெளிநாட்டு சாராயம் மற்றும் வேறு தேசிய சாராய உற்பத்திக்கு வரி நிவாரணம் பெற்றுகொடுக்கப்பட்டுள்ளதால் பனை சாராய கைத்தொழிலில் உழைக்கும் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

நான் ஒரு கட்சியாளராக மதுபானத்திற்கு எதிர்ப்பினை தெரிவித்தாலும், பனை சாராயத்தின் மூலம் வாழ்வாதாரத்தை ஓட்டிச்செல்லும் அப்பாவி மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கபோவதில்லை.

ஆரம்பிக்கப்படவுள்ள இந்த மதுபான தொழிற்சாலைக்கு எதிராக மக்கள் கருத்தினை திரட்டவுள்ளதோடு, ஜனாதிபதி, அமைச்சர்களுக்கு அமைச்சுக்களில் செயற்படுத்த வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தாமல் இருப்பதற்கு அமைச்சர்கள் தெரிந்துகொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா உதவி







வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கு தேவையான குடிநீர் விநியோகத்துக்காக இந்திய அரசினால் அன்பளிப்பு செய்யப்பட்ட 08 தண்ணீர் பௌசர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரஞ்ஜித் சிங் சந்துவால் குறித்த தண்ணீர் பௌசர்களுக்கான ஆவணங்கள் மற்றும் சாவிகள் அடையாளமாக ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டன. 16 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் வறட்சி காரணமாக கடுமையான குடிநீர் பற்றாக்குறைக்கு முகம் கொடுத்துள்ளனர்.

அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், குடிநீர் வழங்கலுக்காக 4.52 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் துனேஸ் கங்கந்த, ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.அபேகோன், இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட பிரதிநிதிகளும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# வளர்ச்சியடைந்து வரும் 2 ஆவது துறைமுகம் கொழும்பு துறைமுகம்

## அமைச்சர் அர்ஜுன சர்வதேசத்துக்கு தெளிவூட்டல்




கொள்கலன்கள் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற துறைமுகங்களுள் மிக வேகமான வளர்ச்சியை கொண்ட இரண்டாவது துறைமுகம் கொழும்பு துறைமுகமென துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்தார்.

இவ்வளர்ச்சி வீதமானது 10.6 வீதமாக பதிவுச் செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் இலங்கையில் சமாதானமான அரசியல் சூழ்நிலை நிலவுகின்றது. முதலீட்டாளர்கள் மற்றும் அரசாங்கம் மிகவும் நட்புடன் செயற்படுகின்றன. இதன் காரணமாக கொழும்பு , ஹம்பாந்தோட்டை, காலி மற்றும் திருகோணமலை ஆகிய வணிக துறைமுகங்களில் முதலீடுகள் மேற்கொள்வது தொடர்பாகவும், இம்முதலீட்டு சந்தர்ப்பங்கள் தொடர்பாக அறிந்து கொள்ளும் பொருட்டு எங்கள் நாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளுமாறு நான் உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

மொரோக்கோவில் நடைபெற்ற சர்வதேச கிரான்ஸ் மொன்டான சமுத்திரவியல் மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இக்கருத்தினை வெளியிட்டார்.

'இருபத்தோராம் நூற்றாண்டு பொருட்டு புதிய ஆபிரிக்க தேசம்' எனும் தலைப்பில் இடம்பெற்ற கிரான்ஸ் மொன்டான மகாநாடு நேற்றுமுன்தினம்; நிறைவடைந்தது. இம்மகாநாட்டில் ஆபிரிக்காவின் விவசாயம் மற்றும் உணவு பாதுகாப்பு, அரசியல் மற்றும் பொருளாதார செயற்பாடுகளின் பொருட்டு பெண்களின் பங்களிப்பு , ஆபிரிக்காவின் சிறு தீவுகளை அபிவிருத்திச் செய்தல் , எதிர்கால தலைமைத்துவம், வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் அனுசக்தி உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல், ஆபிரிக்கா , சிறு தீவுகளில் மக்கள் குடியேற்றங்களை அபிவிருத்திச் செய்தல் மற்றும் சமுத்திரவியல் வர்த்தகம் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

'இலங்கை துறைமுக அபிவிருத்தி கொள்கை மற்றும் திட்டங்கள்' எனும் தலைப்பின் கீழ் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க உரையாற்றினார்.

# புதைக்கப்பட்ட நிலையில் துப்பாக்கி கண்டுபிடிப்பு



(வாழைச்சேனை நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் பொத்தானை காட்டுப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஒன்று நேற்று முன்தினம் மாலை கண்டெடுத்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திப்புட்டுமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தின் விஷேட பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் பொத்தானை காட்டுப்பகுதியில் பாதுகாப்பான முறையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ரீ 56 ரக துப்பாக்கி, மெகசின் மற்றும் த.வி.பு. ஐ 3733 என்று பொறிக்கப்பட்ட தகடு என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

த.வி.பு. ஐ 3733 என்ற ,லக்கத்தகடு எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் புலனாய்வு துறையைச் சேர்ந்த ஒருவரது இலக்கமாக இருக்கலாம் என்றும் ரீ 56 ரக துப்பாக்கி பயன்படுத்தக்கூடிய நிலையில் இருப்பதாகவும் இது தொடர்பான விசாரனைகளை மேற்கொண்டு வருவதாகவும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திப்புட்டுமுன மேலும் தெரிவித்தார்.

# இராணுவப் படை தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க



இராணுவப் படை தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பதவிக்கு 6 பேரின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட நிலையிலேயே, மகேஸ் சேனாநாயக்கவுக்கு நேற்றையதினம் நியமனம் வழங்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் சானா குணதிலக்க, இந்த மாதம் 9 ஆம் திகதி ஓய்வு பெற்றதை தொடர்ந்து இராணுவ கூட்டுப் படை தலைமை அதிகாரி பதவி வெற்றிடமாகவே இருந்து வந்தது.

# பாராளுமன்ற பெண் உறுப்பினர்களினால் கிளிநொச்சியில் மகளிர் தினம்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 'உண்மையான மாற்றத்திற்கான கருவி பெண்கள்' என்ற தொனிப்பொருளில் இலங்கை பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் சங்கமானது நேற்று(22) கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் விசேட நிகழ்வொன்றை நடாத்தியிருந்தது.

பெண்கள் தொடர்பான பிரச்சினைகள், அவர்களின் கருத்துக்கள் மற்றும் புதிய வாய்ப்புக்களை உருவாக்குதல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

நாட்டின் வட மாகாணத்தில் வாழ்கின்ற பெண்கள் தனித்துவமான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதன் காரணமாக குறிப்பாக யுத்தத்தினால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் வடக்கிலுள்ள பெண்கள் இச்சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்களுடன் கூட்டிணைந்து செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்கும் முகமாக மகளிர் தினச் செயற்பாடுகளை வடக்கில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் சங்கமானது வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு, நகர திட்டமிடல் மற்றும் நீர் விநியோக அமைச்சு, ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு, அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு ஆகியன ஒன்றிணைந்து அவுஸ்திரேலிய அரசின் உதவியுடன் குறித்த நிகழ்வை நடத்தியது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான டி.எம். சுவாமிநாதன், சந்திராணி பண்டார, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், இலங்கை பாராளுமன்றத்தின் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள், அவுஸ்திரேலிய தூதரகத்தின் அதிகாரி மைக்கல் நியூமன், மற்றும் மேற்படி அமைச்சுகளின் செயலாளர்கள், பெருமளவான பெண்களும் கலந்துகொண்டனர்.







# ஏறாவூர் இரட்டைப் படுகொலை சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஏறாவூரில் தாய் மற்றும் மகளை படுகொலை செய்த சந்தேக நபர்கள் அறுவரும் ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய முஹம்மத் இஸ்மாயில் முஹம்மத் றிஷ்வி உத்தரவிட்டார்.

ஏறாவூர் நகர பிரதேசத்தில் முகாந்திரம் வீதி முதலாவது குறுக்கு ஒழுங்கையிலுள்ள வீட்டில் வசித்துவந்த தாயான நூர்முஹம்மது உஸைரா (வயது 56) அவரது திருமணமாகிய மகளான ஜெனீராபானு மாஹிர் (வயது 32) ஆகியோர் கடந்த செப்டம்பர் 11 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அறுவரும் செப்டம்பர் மாதம் முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மின்சக்தி அமைச்சின் செயலருக்கு எதிராக பிடியாணை

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் பி.எம்.எஸ்.படகொடவுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தனவுக்கு எதிரான ஊழல் வழக்கு விசாரணைகளின் போது, நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியமை காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக செயற்பட்ட காலத்தில் சொத்து விபரங்களை வெளியிடாமை தொடர்பில் சரன குணவர்த்தனவுக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டது.

இது தொடர்பில் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. குறித்த வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, முதலாவது சாட்சியாளரான படகொட நீதிமன்றத்தில் ஆஜராகாமை குறித்து கொழும்பு பிரதம நீதவான் அவதானம் செலுத்தியுள்ளதாகவும், இதற்கமைய படகொடவை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் ஹெம்மாத்தகம அல்.அஸ்ஹர்

ஹெம்மாத்தகம அல் - அஸ்ஹர் மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு நாளை மறுதினம் நூறு ஆண்டுகளாகின்றன 1917.03.25 ஆம் திகதி இக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

நூற்றாண்டு விழாவை புனித ரமழானின் பின் பிரமாண்டமான முறையில் கொண்டாடுவதற்கு பாடசாலை நிருவாகமும் அபிவிருத்தி சங்கமும் தீர்மானித்துள்ளதாக அதிபர் ஏ.எஸ். அஜ்மீர் தெரிவித்தார்.

நூற்றாண்டு விழாவின் நிகழ்ச்சிகள் நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்லூரி தொடர்பான விசேட மலர் ஒன்று நாளை நவமணியில் வெளிவரும்.

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
23RD MARCH 2017 - THURSDAY

# உள்ளூராட்சித் தேர்தல் எப்போது நடத்தப்படும்?

எல்லை நிர்ணயம் தொடர்பான மூன்று வர்த்தமானி அறிவித்தல்கள் இதுவரை வெளியிடப்படாததனாலே தேர்தல் செயலகத்துக்கு தேர்தல் ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முடியாதுள்ளது.

2013ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் மாநகரசபை உட்பட பத்து உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை கடந்த அரசின் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சராக இருந்த ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் ஒத்திப்போட்டதனையடுத்து இற்றைவரை உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாதிருக்கின்றது.

2013இல் நிறைவேற்றப்பட்ட புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைப்படி எல்லை நிர்ணய ஆணைக்குழு அமைக்கப்பட்டு இதன்பணி முடிந்திராத நிலையிலே மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் ஒத்திப் போடப்பட்டன.

மஹிந்த அரசுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றி பெற முடியாததன் காரணமாகவே புதிய தேர்தல் முறையைக் காரணம் காட்டி தேர்தல் ஒத்திப் போடப்பட்டது.

எல்லை நிர்ணயம் தொடர்பாக நிலவிய இழுபறியைக் காட்டியே இங்கு அரசும் தேர்தலை நடத்தாது பதவிக்காலம் முடிந்து நாட்டின் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் நிர்வாகத்தை ஆணையாளரிடம் ஒப்படைத்தது.

எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நாளை வெளியிடப்படும் என உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் உள்ளூராட்சி மன்றத்தேர்தலை இனியும் நடத்தாதிருப்பதற்கு அரசுக்கு எக்காரணத்தையும் முன்வைக்க முடியாது.

அரசின் பங்காளிக் கட்சியாக இருக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான பாடலி சம்பிக ரணவக உள்ளூராட்சித் தேர்தல் உடன் நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

பாணந்துறையில் கூட்டம் ஒன்றில் பேசிய அமைச்சர் சம்பிக ரணவக பல வருடங்களாக உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கின்றது. இப்போது இந்த கையறு இழப்பு போதுமானது. மக்களது ஜனநாயக உரிமை பேணப்பட வேண்டும். பழைய முறையிலோ, புதிய முறையிலோ உடன் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்து இரு வருடங்களை நெருங்கி வரும் நிலையில் மக்கள் கருத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உள்ளூராட்சி தேர்தலை இனியும் தாமதிக்காது நடத்துவதற்கு அரசு முன் வரவேண்டும்

கடந்த அரசுக்கு எவ்வளவு விமர்சனங்கள் எழுப்பப்பட்டாலும் வடகிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமையால் மக்களது தேவைகள் சரியாகக் கவனிக்கப்படாதுள்ளன. நாட்டின் அநேக பகுதிகளில் டெங்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. டெங்கு பரவுவதற்கு முக்கியமான காரணிகளில் ஒன்றாக உள்ளூராட்சி மன்றங்களில் சீரான நிர்வாகம் இல்லாமையே கூறப்படுகின்றது.

இந்த நிலையில் அரசு இனியும் தாமதப்படுத்தாது உள்ளூராட்சித் தேர்தலை நடாத்தி மக்கள் பிரதிநிதிகள் கையில் நிர்வாகத்தைக் கையளிக்க வேண்டும்.

ஜனநாயகத்துக்கு, நல்லாட்சிக்கு முக்கியத்துவமளிக்கும் இந்த அரசுக்கு தேர்தலை நடத்தாதிருப்பதன் மூலம் கிடைக்கும் அவப்பெயரை தவிர்ப்பதற்கு உடன் தேர்தலை நடத்த முன்வர வேண்டும்.

---

# மோதலின் மூலம் பாதிப்படையாத ஒருவர் கூட இல்லை

**விரிவுரையாளர்**
**கல்கந்தே தம்மானந்த தேரர்**



சுமார் முப்பது வருடங்களாக ஆயுதப் போராட்டம் இடம்பெற்றது. இந்த யுத்தத்தினால் பெரும்பாலானோர் பாதிப்படைந்தனர். இம்மோதலினால் தமது தரப்பினர் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் சமூகத்தில் உள்ளனர். யுத்தத்தின் விளைவாக சிங்கள சமூகத்தினரின் எல்லைக் கிராமங்களில் குண்டுத் தாக்குதல்களுக்கு ஆளானவர்களும் உள்ளனர். இராணுவத்தினர் என்ற வகையில் அவர்கள் மத்தியிலும் பாதிக்கப்பட்டோர் உள்ளனர். தகப்பன்மார்களை இழந்த சிறுவர்கள் இவ் அனைத்து தரப்பிலும் உள்ளனர். பாரியளவில் சொத்துக்கள் சேதமடைந்தன. இப்பிரதேசத்தில் அல்லது குறித்த எல்லைப் பிரதேசத்திற்குள் பாதிப்புக்குள்ளான வர்க்கமான இவர்களை இனங்காணலாம்.

இதற்கும் மேலாக மேலும் பலர் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டனர். தொலைக்காட்சி போன்ற பல்வேறு ஊடகங்களில் இந்த யுத்தத்தைப் பார்த்தவர்கள் உள்ளனர். விசேடமாக சிறுவர்கள், சிறுவர்களுக்கு இதனை ஒரு விளையாட்டாக, கார்ட்டூன் ஆகக் காட்டுகின்றபோது அது பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. முழு நாட்டிலும் இன, மத வேறுபாடுகள் இன்றி செய்திகளைப் பார்வையிடுவதன் மூலம் யுத்தத்தைக் கண்கூடாகப் பார்த்த ஒரு சந்ததியினர் உள்ளனர். இவர்களும் மனோ ரீதியாக பாதிக்கப்பட்டவர்களாவர். இவ்வாறு நோக்கும்போது பாதிக்கப்படாதவர்கள் யாரும் இல்லை என்றே கூறலாம். இவ் அனைவரையும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களெனக் கருத வேண்டும்.

இங்கு பாரதூரமாகப் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளனர். ஒருவரது பிள்ளை காணாமற் போயுள்ளதாக எடுத்துக்கொள்வோம். என்ன நடந்ததென்று தெரியாது. அவ்வாறான ஒரு நபர் சமூகத்தில் இருப்பதென்பது ஒரு பாரதூரமான பிரச்சினையாகும். இது குணப்படுத்தப்படல் வேண்டும். யுத்தத்தை அனுபவித்த ஒரு தலைமுறை இருப்பது இதனைவிட பயங்கரமானதாகும். சிலவேளை யுத்தம் இல்லாதது அவர்களுக்கு ஒரு குறையாக விளங்கலாம். உதாரணமாக யுத்தம் இல்லாததன் காரணமாகத் தாக்குவதற்கு எவருமில்லை என்பதைக் குறிப்பிடலாம். இதன் மூலம் ஓர் இடைவெளி உருவாக்கப்படுவதனால், இது ஒரு பயங்கர நிலைமையாக மாறுகிறது. இவ் இடைவெளியை நிரப்புவதற்கு எவராவது தலையிட முடியும். இதில் உள்ள பிரச்சினை ஒரு புறமிருக்க வேறு ஒரு பாரிய பிரச்சினை உருவாகக் கூடும். இவ்வாறே யுத்தத்தின் பாதிப்பை நான் நோக்குகின்றேன்.

இவ் இடத்திலிருந்து எவ்வாறு நகர்வது என்பது பற்றி மிகவும் கவனமாகத் தலையிடல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் யாரென நோக்கும்போது மனிதர்களே தென்படுவதால் கவனமாகச் செயற்பட வேண்டிய ஒரு தலையீடாக உள்ளது. இவ்வாறின்றி ஓர் இனப்பிரிவினருக்கு ஏற்பட்ட ஒரு பாதிப்பாக நோக்குவோமாயின் அது கடினமானதாக அமையும். ஆகவே, முதலாவது விடயமாக இவ்விரு பக்கங்களிலுமுள்ள மக்களின் வாழ்வு பற்றி படம் பிடித்துக் காட்டுவதற்கான ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி நம்மிடம் இல்லை. அவ்வாறே தெற்கு மக்களின் வாழ்வு உதாரணமாக ஹம்பாந்தோட்டை, அம்பாறை, தனமல்வில ஆகிய பிரதேச மக்களின் வாழ்க்கை முறை பற்றி எவருக்கும் தெரியாது. யுத்தம் முடிவடைந்த பின்பு வடக்கிலிருந்து தெற்கே வரும் மனிதர்கள் கொழும்பிலுள்ளவர்களை மாத்திரமே காண்கின்றனர். கொழும்பைப் பார்த்தவுடன் சிங்களவர்களுக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லையென எண்ணுகின்றனர். உண்மையான மக்கள் வாழ்வினை இரண்டு பக்கத்திற்கும் சித்தரித்துக் காட்டும் வேலைத்திட்டங்கள் அவசியமாகும். பாதிக்கப்பட்டவர்களுக்காக முதலாவதாக செய்ய வேண்டியது என்னவென்பது பற்றியது அல்ல என நான் நினைக்கின்றேன். இரண்டு பக்கத்திற்கும் இரண்டு பக்கமும் திறக்கப்படல் வேண்டும். இது அத்தியாவசியமானதாகும். பிரதானமான ஒரு பணியை ஊடகங்கள் மேற்கொள்ள வேண்டுமென நான் யோசனை தெரிவிக்கின்றேன். நாம் அறிந்த வகையில் தொலைக்காட்சி போன்ற ஊடக நிறுவனங்கள் தமது கலையகங்களுக்கே நபர்களை வரவழைக்கின்றனர். நான் கூட அவற்றுக்குச் செல்கின்றேன். போய் அதுபற்றிக் கதைக்கின்றேன். வீடுகளில் இருந்தவாறு மனிதர்கள் அதற்குச் செவிசாய்க்கின்றனர். கலையகங்களுக்கு வரையறுக்கப்பட்ட கலந்துரையாடல்களிலிருந்து விடுபடல் வேண்டும். இத் தொலைக்காட்சிக் கலையகங்களிலிருந்து மீண்டு மனிதர்கள் மத்தியில் சென்று அவர்களது உண்மையான வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்ட வேண்டும்.

### பிள்ளைகள் அற்ற தாய்மார்கள்

இவ்வாறு துன்பப்படும் இனப் பிரிவினரை இரு பக்கத்திலும் காட்சிப்படுத்துகின்றபோது வாழ்க்கை எவ்வளவு கடினமானது என இரு சாராருக்கும் தென்படுகிறது. இதன் மூலம் நாம் இரு சாராரும் ஒரே விதமாக துன்பப்படுபவர்கள் என்பது தென்படுகிறது. அடுத்த இடத்திற்குச் செல்ல இது அடிப்படையாக அமையும். இதற்காக ஊடகக் குழுக்கள் அவர்களிடம் செல்லல் வேண்டும். அவ்வாறு காட்டப்படும்போது வெவ்வேறான விடயங்களை அவர்களால் பார்க்க முடியும். முதலாவது விடயமாக அது அத்தியாவசிமாகின்றது. நாம் எவ்வாறு குணப்படுத்தப்படும் இடத்திற்கு செல்கிறோம் என்பதை அதன் பின்னர் நம்மால் கண்டுகொள்ள முடியும். அதன் பின்னர் பரஸ்பர உறவினைக் கட்டியெழுப்ப முடியும். அது ஒரு பரிமாற்ற நிகழ்ச்சியாக அமையலாம். பாடசாலைகளுக்கிடையிலான நிகழ்ச்சியாக இருக்கலாம். இதன்போது யுத்தத்தினால் தனது ஒரு பிள்ளையை இழந்த ஒரு தாயைச் சந்திக்க முடியுமாயின், ஒருவேளை எல்.ரீ.ரீ.ஈ கரும்புலி அல்லது வேறு வகையில் கூறப்படும் ஒரு பிள்ளையை இழந்த ஒரு தாயாக இருக்கலாம். அவ்வாறானவர்களைச் சந்திப்பது அவசியமாகும். அவ்வாறானவர்களைச் சந்திப்பதை இரண்டாவது விடயமாகக் கருதலாம். இவ்வாறான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்குச் செல்லாமல் நேரடியாகக் காயங்களுக்கு மருந்துபோடும் வேலையைச் செய்ய முடியாது. அவ்வாறு செய்வது சாத்தியப்பட மாட்டாது. அவ்வாறு இடம்பெறாதபோது பரிகாரம் தேடுவதை நிறுத்தும் நிலைக்கு தள்ளுதல் இலகுவாகலாம். இது கடினமான செயற்பாடுகளாக இருந்தாலும் இது நடைபெறுதல் வேண்டும். அதன் பின்னர் பாதிக்கப்பட்டவர்களை இனங்காண முடியும். அதற்கான பிடிமுறைகளைத் திட்டமிட முடியும்.

பௌத்த சிந்தனையின் அடிப்படையில் நான் இதில் தலையிடுவதால் மன்னிப்பு வழங்குதல் பற்றிச் சிந்திக்கின்றேன். ஒருவர் குணமடைய வேண்டுமாயின், எனக்குக் குற்றமிழைத்தவர் என்மீது குற்றமிழைத்துவிட்டார் என நான் சிந்தித்தவண்ணம் உள்ளேன். குற்றம் புரிந்தவர் எந்தவிதப் பிரச்சினையுமின்றி சமூகத்தில் வாழ்ந்துகொண்டிருப்பாராயின் பாதிக்கப்பட்டவர் என்ற வகையில் நான் குணமடைய மாட்டேன். குணமடையச் செய்வதற்குரிய ஒரு செயன்முறை அவசியமாகும். செயன்முறை மூலமே குணமடையலாம். குறிப்பிட்டளவு எண்ணிக்கையான எல்.ரீ.ரீ.ஈ சந்தேக நபர்கள் சிறைகளில் உள்ளதாக நான் எண்ணுகின்றேன். அவர்கள் தொடர்பில் வழக்கு விசாரணைகள் இல்லை. அல்லது வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்குவதற்கான சரியான தருணம் இதுவென்று நான் நினைக்கின்றேன். வேறுபட்ட ஒரு சூழலில் இவர்கள் குற்றம் புரிந்திருக்கக்கூடும். சுமுகமான ஒரு சூழ்நிலையில் அவர்கள் குற்றம் புரியவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களில் அப்போதிருந்த சூழ்நிலையில் இவ்வாறானவற்றில் ஈடுபடாமலிருக்க எவராலும் முடிந்திருக்காது என நான் நினைக்கின்றேன். அவ்வாறான ஒரு சூழலில் அவர்கள் அவ்வாறு செய்திருந்தாலும் தற்போது நிலைமை மாற்றமடைந்துள்ளது. நிலைமை மாறியிருப்பின் துணிச்சலான ஒரு தீர்மானத்தை மேற்கொண்டு பொதுமன்னிப்பு வழங்க முடியுமாயின் அது வடக்கு மக்களிடம் முக்கியமானதொரு செய்தியைக் கொண்டு செல்லக்கூயதாயிருக்கும். இது பாரியதொரு பணியாகும். பொது மன்னிப்பு வழங்கப்பட்டதன் பின் அது பொதுவான ஒரு செய்தியாகக் கொண்டு செல்லப்படும். இதற்கு முன்னுரிமையளிப்பதில் தவறில்லை.

இரண்டாவது விடயம் காணி, அவர்களுக்குச் சொந்தமான காணிகள் அவர்களுக்கு மீள வழங்கப்படல் வேண்டும். யுத்தம் முடிவடைந்த பின்னர் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பாகுபாடின்றி அவர்களது காணிகள் மீள ஒப்படைக்கப்படல் வேண்டும். மனிதர்கள் தமது வாழ்க்கையை ஆரம்பிக்க அவற்றை அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். இவை அடிப்படைத் தேவைகள் ஆகும். அதற்கடுத்த மிகக் கஷ்டமான விடயம்தான் தமது பிள்ளைகள் காணாமலாக்கப்பட்ட பெற்றோர்கள் சிங்கள மக்களிடையே உள்ளனர். இராணுவத்தில் இருந்தபோது காணாமலாக்கப்பட்டனர். அவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியாதவர்களும் உள்ளனர். தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என அறியாத ஒரு பிரிவினர் வடக்கில் உள்ளனர். சிலபோது யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்ததன் பின்னர் காணாமலாக்கப்பட்ட பிள்ளைகளும் உள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என அறியும் தேவை காணப்படுகிறது. எதுவுமே நடக்காததைப் போன்று இருக்க முடியுமா? அல்லது என்ன நடந்தது என அறிய வேண்டுமா? குணமடைந்ததற்காக என்ன நடந்தது என்பதைப் பற்றி அறிவதற்கு ஏதேனுமொரு முறைமை தேவைப்படுகிறது. ஏதேனும் ஒரு சிந்தனையுடனான வேலைத்திட்டம் தேவைப்படுகிறது. இவ்வாறு செய்யும்போது இது அவ்வளவு கடினமானதாக அமையாது என நான் நம்புகிறேன்.

### வாழ்வின் எதிர்பார்ப்பு

இதன் பின்புதான் கடினமான பகுதி உள்ளது. இக்கடினமான பகுதிக்குச் செல்ல முன்னர் மனிதர்களுக்கிடையே பாரியதொரு கட்டியெழுப்புதல் தேவைப்படுகின்றது. அதாவது எவரும் எவரையும் பழிவாங்குவதோ, தண்டனை வழங்குவதோ சிறையில் அடைப்பதோ அல்ல. நாம் இந்த இடத்திலிருந்து வாழ்க்கையைத் தொடங்குவோம். அழிவடைந்தது போதும் எனும் இடத்திற்கு கொண்டுவருதல் அவசியம். அங்கு என்ன நடந்தது என்பது பற்றி நேர்மையான முறையில் பார்க்கும் நிலைமைக்கு மனிதர்களைக் கொண்டு வர முடியும். ஆகவே நான் முன்னர் குறிப்பிட்டது போன்று எல்.ரீ.ரீ.ஈ எனப்படுபவர்கள் விசேடமான ஒரு நிலைமையின் கீழ் அவ்வாறு செய்தார்கள். விசேட ஒரு நிலைமையின்கீழ் இராணுவம் அவ்வாறு நடந்துகொண்டது. மனிதர்களின் வாழ்வு பற்றி எதிர்பார்ப்புக்கள் அற்ற, திரும்பி வரமுடியும் என்ற எதிர்பார்ப்பற்ற மனிதர்கள் அவர்கள். அம்மனிதர்கள் இவ் விசேட நிலைமைகளின் கீழ் குற்றம் புரிந்திருப்பின் அதுவும் ஒரு விசேட நிலைமைதான். இவ்வாறான ஓர் அடிப்படையில் இருந்துகொண்டு தான் பயணிக்க வேண்டுமென நான் நினைக்கின்றேன். அவ்வாறு நடைபெறுமாயின், எல்லோரும் குற்றம் புரிந்துள்ளார்கள், எவருக்காகவோ யார்யாரையோ காப்பாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்றிட்டம் அல்ல என நம்மால் கூற முடியும். பொதுவாக நாம் எங்கு உள்ளோமோ அங்கிருந்துதான் ஆரம்பிக்கப்படல் வேண்டும். பொது இணக்கப்பாடு எங்கு உள்ளது? பொதுவாக நாம் எதில் தங்கியுள்ளோம்? இவ்வாறானவைகள்தான் இடம்பெற வேண்டுமென நான் நம்புகிறேன்.

இதன்போது ஊடகங்களுக்கு மேலதிகமாக கல்வி, கலை, இலக்கியம் ஆகிய துறைகளிடமும் பாரியதொரு கடமைப்பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. இறுதியாக மனிதர்கள் சிந்திப்பதற்கு அமையவே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். சிந்திக்கின்ற விதத்தினை மாற்றுவதில் கல்வி முக்கிய இடத்தை வகிக்கின்றது. அதன்பின்னர் கலை, இலக்கியம், கல்வி இதில் பிரதான பங்கு வகிக்கின்றது. யுத்தத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு மாதிரி அமைப்பு தற்போது எம்மிடம் காணப்படுகிறது. இம்மாதிரியினுள் யுத்தம் முடிவடைந்த பின்னர் உருவாகக்கூடாத உரையாடல்கள் உருவாகி இருப்பின் இதில் பாரதூரமான மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். மீண்டும் ஒரு முறை கல்விப் பாடத்திட்டம் தொடர்பாக கவனஞ் செலுத்துதல் வேண்டுமென நான் நினைக்கிறேன். யுத்தத்தினால் கட்டியெழுப்பப்பட்ட பல விடயங்கள் மாற்றமடைய வேண்டும். அவ்வாறுதான் இலங்கையர் என்ற எண்ணம் உருவாகும். அவ்வாறான கருத்து எம்மிடம் இல்லை.

சாதி மதம் என்ற ரீதியில் சிந்திக்காத ஒரு நிலைமைக்குச் செல்ல வேண்டும். இதன்போது கல்விக்கு முக்கியமானதொரு கடமைப்பொறுப்பு உள்ளது. கல்வியியலாளர் பாரியதொரு தலையீட்டினை மேற்கொள்ள வேண்டியவர்களாயுள்ளனர். அவ்வாறுதான் இலக்கியம் கலை, திரைப்படம் போன்றனவும் அமைய வேண்டும். இவைகளுக்கு மிகவும் வலுவான முறையில் இவ்வாறாகவே மனிதர்களுக்கு அறிவினை வழங்க முடியும்.

தமிழ்மொழி மூலம் காணப்படும் ஏதேனுமொரு கலை நூலின் மூலம் சிங்கள சமூகத்தில் நிலவும் பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூற முடியும். இரு தரப்பினரும் அவரவர்களது பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதே தற்போது முக்கியமானதாகவுள்ளது. கலை நூல்கள் மூலம் இதனை வெளிக்கொணரக்கூடியதாயிருக்கும். ஆகவே கலைக்கு பாரியதொரு பொறுப்பு உள்ளதென நான் கருதுகின்றேன்.

(திங்கள் தொடரும்...)

# கழிவு நீரை மீள்சுழற்சி மூலம் மீண்டும் பயன்படுத்த கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்

## உலக நீர் தின தேசிய விழாவில் அமைச்சர் ரவூப் ஹக்கீம்



(நாச்சியாதீவு பர்வீன்)

கழிவு நீரை மீள்சுழற்சி மூலமாக மீண்டும் பயன்படுத்துவதற்கான கருத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம். இம்முறை எமது கருப்பொருள் கழிவுநீர் முகாமைத்துவம் என்பதாகும். இன்றைய காலகட்டத்தில் நாம் எதிர் நோக்கும் பாரிய சவால்களில் முக்கியமான ஒன்றாக இதனைக் கொள்ளமுடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

உலக நீர் தினத்தை முன்னிட்டு கொழும்பு தாமரைத்தடாகத்தில் மார்ச் (22) புதன்கிழமையன்று நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

கழிவு நீரை மீள சுத்திகரித்து அதனைப் பயன்படுத்துவது தொடர்பாக எமது மக்கள் அறிவூட்டப்பட வேண்டும். எமது நீர் மூல வளங்களையும் நீரேந்தும் காடுகளையும் பாதுகாக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். ஆறு குளம் முதலான நீர்வளங்களை பாது காக்கும் விடயத்தில் ஜனாதிபதி கூடிய அக்கறை செலுத்தி வருகிறார். எனவே, இவ்விடயம் தொர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பொது சுகாதார தேவைகளுக்காக பயன்படுத்திய நீரையும் ஏனைய விதமான சுத்தப்படுத்தல்களுக்காக பயன்படுத்தப்பட்ட நீரையும் மீளப்பயன் படுத்துவதற்காக சுத்திகரிக்கும் முறைகளும் காணப்படுகின்றன. இந்தப் பொறுப்பை நிறைவேற்ற புதிய பொறி முறைகளை அறிமுகப்படுத்தி நீரை சுத்திகரிப்பு செய்வது தொடர்பாக செயற்படுவதற்கு வேறு தனியான ஓர் அலுவலகத்தை எமது அமைச்சின் கீழ் ஆரம்பித்துள்ளோம்.

'காபன் கொபி' எனும் மற்றுமொரு கொள்கைத்திட்டமும் உள்ளது. அதாவது உற்பத்தி செய்யப்படும் எந்த ஒரு பொருளிலும் காணப்படும் நீரின் பெறுமானத்தை கணிப்பீடு செய்யும் செயல்முறையாகும். இதற்காக பல்வேறு சட்டதிட்டங்கள் வகுத்து செயலாற்ற வேண்டியிருந்தாலும் இதனை தற்போது சுயமாக விரும்பி செயற்படுத்தும் நடைமுறையொன்றை உத்தேசித்துள்ளோம். பூமியில் பெருமளவிலான நீர் மூல வளங்கள் காணப்பட்டாலும் தற்போது நிலவும் வறட்சியான காலநிலைக்கு முகம் கொடுப்பது ஒரு சவாலாகவே காணப்படுகிறது. எமது நாட்டில் சில பகுதிகளில் மக்கள் குடிநீரை பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அவர்கள் தொடர்பாக கவனம் செலுத்தவேண்டிய கடப்பாடு எமக்கிருக்கிறது.

எமது அமைச்சின் மூலம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பாரிய கருத்திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுத்துவருகிறோம் இதற்காக 300 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டளவில் எமது நாட்டில் குழாய்வழியாக சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்வோரின் தொகை 60 சதவீதமாக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். குடிநீரைப்பெற்றுக் கொள்ளும் மாற்று வழிமுறைகளில் ஒன்றான கடல்நீரை சுத்திகரிக்கும் செயற்திட்டத்தை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்தவுள்ளோம். யாழ்ப்பாணம், கற்பிட்டி முதலான பிரதேசங்களில் மட்டுமல்லாது ஹம்பாந் தோட்டையில் ஆரம்பிக்கப்படவுள்ள பாரிய வர்த்தக வலயத்திற்கும் இப்பொறி முறைமூலமே நீரைப்பெற்றுக்கொடுக்க திட்டமிட்டுள்ளோம்.

பேராதெனிய பல்கலைக்கழத்துடன் இணைந்து சீன அரசின் அனுசரணையுடன் நீர் தொடர்பான ஆய்வு மையம் ஒன்றினை ஆரம்பிக்கவுள்ளோம். எதிர் வரும் ஜூலை மாதத்தில் இலங்கைக்கு வருகை தரவுள்ள சீன நாட்டு தலைவரால் இக்கருத்திட்டத்தை ஆரம்பிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் எனவும் அவர் கூறினார்.

இந்த நிகழ்வில், நீர்வழங்கல் அதிகார சபையினால் தேசிய ரீதியாக பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அமைச்சின் அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# மின்சார கம்பங்களுக்கிடையில் கட்டடங்கள் அமைக்க புதிய சட்டம்

மின் விநியோக கம்பிகளுக்கு இடையில் கட்டடங்கள் அமைப்பது தொடர்பில் புதிய சட்டமொன்று கொண்டு வரப்படவுள்ளதாக இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.சட்டத்திற்கமைவாக மின் கம்பிகளுக்கும் கட்டடங்களுக்குமிடையிலான இடைவெளி குறித்தும் ஒழுங்குவிதி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

1000 வோல்ட் மின்சாரத்தை விநியோகிக்கும் கம்பிகளுக்கும், கட்டடங்களுக்குமிடையில் 2.4மீற்றர் இடைவெளி இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், குறைவான இடைவெளியில் கட்டடங்கள் அமைக்கப்படுமாயின் அது சட்டவிரோத செயற்பாடு எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.இது குறித்து சகல மாகாண சபைகளுக்கும் அறிவிக்கப்படவுள்ளதுடன், கட்டடமொன்றை அமைக்கும் போது இலங்கை மின்சார சபையினதோ அல்லது தனியார் மின்சார சபையின் சான்றிதழையோ பெற்றிருக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கட்டடங்கள் மற்றும் நுகர்வோரின் பாதுகாப்பை நோக்காகக் கொண்டு, இந்த நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக, ஊடக அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், 1,000 வோல்ட்டுக்கும் குறைந்த மின்சாரத்தைக் கடத்தும் மின் இணைப்புகளின், கட்டடமொன்றில் இருந்தான செங்குத்துத் தூரம் அல்லது அமைப்பு 2.40 மீற்றராகவும் கிடைமட்டத்தூரம் 1.50 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.1,000 வோல்ட்டுக்கும் அதிக மின்சாரத்தைக் கடத்தும் ஆனால், 11,000 வோல்ட்டுக்கும் குறைவான மின்சாரத்தைக் கடத்தும் மின் இணைப்புகளின் செங்குத்துத் தூரம் 2.70 மீற்றராகவும் கிடைமட்டத்தூரம் 1.50 மீற்றராகவும் இருத்தல் வேண்டும். 11,000 வோல்ட்டுக்கும் அதிகளவான ஆனால், 33,000 வோல்ட்டுக்கும் குறைந்தளவினான மின்சார இணைப்புகளின் செங்குத்துத்தூரம் 3.00 மீற்றராகவும் கிடைமட்டத்தூரம் 2.00 மீற்றராகவும் இருத்தல் வேண்டும். 33,000 வோல்ட்டுக்கும் 132,000 வோல்ட்டுக்கும் இடைப்பட்ட மின் இணைப்புகளின் செங்குத்துத் தூரம் 4.10 மீற்றராகவும் கிடைமட்டத்தூரம் 4.10 மீற்றராகவும் இருத்தல் வேண்டும். 132,000 வோல்ட் மின்னை பாய்ச்சும் ஆனால், 220,000 வோல்ட்டுக்கும் குறைந்த மின்னைப் பாய்ச்சும் மின் இணைப்புகளின் செங்குத்துத்தூரம் 5.18 மீற்றராகவும் கிடைமட்டத்தூரம் 5.18 மீற்றராகவும் இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிழக்கு முதலமைச்சரின் கோரிக்கைக்கு இணங்க டெங்கு ஒழிப்புக்கு 45 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு



கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டின் கோரிக்கைகு இணங்க டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக கிழக்கில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு 45 மில்லியன் ரூபா நிதியை வழங்க உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைஸர் முஸ்தபா பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனடிப்படையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக கிழக்கு மாகாணத்தில் உள்ள 45 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தலா 10 இலட்ச ரூபா வீதம் வழங்குவதற்கு அமைச்சரின்செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டின் கோரிக்கைக்கு அமைவாக கிழக்கு மாகாண சபைக்கு வருகை தந்த உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர்பைசர் முஸ்தபா, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிஷாட் பதியுதீன் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரதிமைச்சர் அமீர் அலி, பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப் உள்ளிட்டவர்களுடன் இராணுவ உயர் அதிகாரிகள், மாகாண செயலாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெளிவு படுத்தினார்.

உள்ளூராட்சி மன்றங்களில் நிலவும் ஆளணிப்பற்றாக்குறை மற்றும் வாகனங்கள் மற்றும் உபகரணப் பற்றாக்குறை தொடர்பிலும் கிழக்கு முதலமைச்சர் உள்ளூராட்சி மன்ற அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனடிப்படையில் முதலமைச்சரின் கோரிக்கையை கருத்திற் கொண்ட உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் கிழக்கின் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு 450 இலட்சம் ரூபாவை உடன் வழங்குமாறு அமைச்சின்செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன் மூலம் மாகாணத்தின் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையினை தீவிரப்படுத்த இந்த நிதி பாரிய உதவியாக அமையும் எனவும் கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் தமது கோரிக்கைக்கு செவி சாய்த்து 45 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் நன்றிகளையும் தெரிவித்தார்

## இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு 215 தமிழ்பேசுவோர் தகுதி!

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் மூன்றாம் வகுப்பிற்கு தகுதியானவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 205 தமிழ்மொழி மூல பரீட்சார்த்திகள் அடிப்படைத் தகுதிகளைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த 216 பேரும் நேர் முகப் பரீட்சையொன்றிற்குத் தோற்ற வேண்டும். அதிலிருந்தான் தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படுமென்று கல்வியமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.வட மாகாணத்தைச் சேர்ந்த 101பேர் தெரிவாகியுள்ளதுடன் 65 பேர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக காணப்படுகின்றதுடன் அவர்களில் 36 தமிழர்களும், 29 முஸ்லிம்களும் ஆவர்.

வடக்கு கிழக்கைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலிருந்து 36 தமிழ்மொழி பேசுவோர் தெரிவாகியுள்ளதுடன், ஆங்கில மொழி மூலம் 13 சிறுபான்மையின தமிழ் முஸ்லிம் பரீட்சார்த்திகள் தெரிவாகியுள்ளனர். மேலும் இவர்களின் பெயர் மற்றும் விபரம் கல்வியமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை**

**உண்மையான உறுதியான மஹர் அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர்** M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.)T.P: 0772810009. WhatsApp: 0779697790 Email - nrahmathullah786@yahoo.com

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு**

**மாந்தை சோல்ட் லிமிற்றெட்**

**சாதாரண உப்பு விற்பனைக்கான கேள்விகளின் அழைப்பு**

மன்னார் மற்றும் ஆனையிறவு உப்பளங்களில் உற்பத்தி செய்யப்படும் சாதாரண உப்பிற்கான கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் ஆதிக்கவரம்பின் கீழுள்ள அரசசார்ந்தகம்பனியொன்றே மாந்தை சோல்ட் லிமிற்றெட்டாகும். கம்பனியிடமிருந்து உப்பை கொள்வனவு செய்வதற்காக ஆர்வமுள்ளசாராரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கம்பனியானது கோருகின்றது.

விலையானது ஆகக் குறைந்தது 500 மெ.தொன்னுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பின்வரும் அலுவலகங்களிலிருந்து பொது முகாமையாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் 2017.03.23ஆம் திகதியிலிருந்து 2017.04.06ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமான 1500/- ரூபாவைச் செலுத்திய பின்னர் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

1. மாந்தை சோல்ட் எல்டிடீ - இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 05
2. த மாந்தை சோல்ட் எல்டிடீ - மன்னார் உப்பளம், பெரிய கடை, மன்னார்.
3. மாந்தை சோல்ட் எல்டிடீ - ஆனையிறவு உப்பளம், ஆனையிறவு, கிளிநொச்சி.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2017.04.06ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். அல்லது அதே முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரம் முடிந்தவுடன், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

அனைத்து விலைமனுக்களும் புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றினால் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மாத்திரம் (50,000/- ரூ) வழங்கப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுவின் மூடும் திகதியிலிருந்து 30 நாட்களுக்கு செல்லுபடியானதாகவிருத்தல் வேண்டும்.

மேலதிக தகவலுக்காக 011-2347392 என்ற தொலைபேசி எண்ணினூடாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் பெறுகைப் பிரிவுடனும் 011-2368964 என்ற தொலைபேசி எண்ணினூடாக பொது முகாமையாளருடனும் தொடர்பு கொள்ளவும்.

எவ்வித காரணத்தையும் முன்வைக்காமல் ஒன்று அல்லது அனைத்து கேள்விகளையும் நிராகரிப்பதற்கான உரிமையை கேள்விச் சபையானது கொண்டுள்ளது.
மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு :

**தலைவர், கணிப்பிடல் குழு,**
**மாந்தை சோல்ட் லிமிற்றெட்,**
**பெறுகைப் பிரிவு,**
**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு,**
**73/1, காலி வீதி, கொழும்பு - 03**

Mantai Salt

**கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு**

**கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்**

**கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்படாத (Crud Coconut oil) தேங்காய் எண்ணெயினை சுத்திகரிப்பதற்காக எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களிடமிருந்து விலை மனுக் கோரல்.**

கூ.மொ.கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயினை சுத்திகரிப்புச் செய்வதற்காக சுத்திகரிப்பு கம்பனியிடமிருந்து (கூட்டு முயற்சிகள்) விலை மனுக்கோரப்படுகின்றது. இத்துடன் உங்கள் ஆலோசனைகளையும் சமர்ப்பியுங்கள்.

அதற்கான விண்ணப்பப்படிவத்தை காசாளரிடம் 2000 ரூபாவைச் செலுத்திய பின் கூ.மொ.கூட்டுத்தாபன பிரதான அலுவலகத்தின் 07 ஆம் மாடியிலுள்ள சேவைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
விலை விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவம் 2017.03.28ஆம் திகதி 14.00 மணிக்கு கூ.மொ. கூட்டுத்தாபன பிரதான அலுவலகத்தின் ஏழாவது மாடியில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடவும்.

மேலதிக விபரங்களை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துக்குப் பேசிப் பெற்றுக் கொள்ளலாம்.

**அஜித் இந்தரசிறி 077 - 3203580**

சுத்தப்படுத்தப்படும் தேங்காய் எண்ணெயின் குணாம்சங்கள் பின்வரும் அடிப்படையில் இருக்க வேண்டும்.

| Characteristic | Refined, bleached and deodorized coconut oil |
|---|---|
| colour 25-mm cell on the lovibond colour scale expressed in Y+5 R, not deeper | 2 |
| Relative density at 30 Oc 30 Oc | 0.915 to 0.920 |
| Refractive index at 40 OC | 1,4480 to 1,4492 |
| Moistrure & other matter volatile at 105 OC, max | 0.1 |
| Insoluble impurities, per cent by mass, max | 0.05 |
| Free fatty acids, as lauric acid, per cent by mass | 0.1 (max) |
| Iodine value | 7.5 to 9.5 |
| Saponification Value | 255(min) |
| Unsaponifiable matter, per cent by mass, max | 0.5 |
| Minaral acidity | Nil |

**தலைவர்**
**கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்**
27,வொக்ஷோல் வீதி, கொழும்பு-2.



# ஆளுமைத் திறன்

ஆளுமைத் திறன் கொண்டவர்களால்தான் மற்றவர்களை எளிதாக கவரமுடியும். செயற்பாடு, நடத்தை, குணாதிசயங்களையும் வைத்துதான் ஆளுமை மதிப்பீடு செய்யப்படுகிறது. பெண்களை அழகாக மாற்றும் ஆளுமை.

நாகரிகமாக உடை உடுத்துவதையும், அலங்காரம் செய்து கொள்வதையும் வைத்து மட்டுமே ஒருவருடைய ஆளுமை தீர்மானிக்கப்படுவதில்லை. செயற்பாடு, நடத்தை, குணாதிசயங்களையும் வைத்துதான் அவரது ஆளுமை மதிப்பீடு செய்யப்படுகிறது. மக்கள் தொடர்புத் துறையில் பணியாற்றுகிறவர்கள், அலுவலக பணிகளில் இருப்பவர்கள், புதிதாக வேலைக்கு முயற்சிப்பவர்கள் அனைவருமே தங்கள் ஆளுமைத்திறனில் அதிக கவனம் செலுத்த வேண்டியதிருக்கிறது.

ஆளுமைத் திறன் கொண்டவர்களால் தான் மற்றவர்களை எளிதாக கவரமுடியும். ஈடுபட்ட துறையில் சாதிக்கவும் முடியும். இப்படி ஒவ்வொருவரிடமும் இருக்கும் ஆளுமைத்திறனை மேம்படுத்துவதற்காக, 'இமேஜ் கன்சல்டென்ட்' என்ற துறை வழிகாட்டுகிறது.

நடை, உடை, பாவனைகளில் எத்தகைய மாற்றங்களை செய்யவேண்டும்- மற்றவர்களிடம் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பவைகளை பற்றி எல்லாம் அந்தந்த துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆலோசனை வழங்குவார்கள்.

ஒருவரை சந்திக்கும்போது நமது தோற்றம் மட்டுமல்ல, நாம் நடந்து கொள்ளும் விதமும்தான் நம்மைப்பற்றிய 'இமேஜை' அவரிடம் உருவாக்கும். நல்ல படிப்பும், அனுபவமும் மட்டுமே எல்லா நேரங்களிலும் நன்மதிப்பை பெற்றுத்தந்துவிடுவதில்லை. அதற்கு மேலும் காலத்துக்கு தக்கபடி புதிய விஷயங்கள் தேவைப்படுகிறது. அவைகளை 'இமேஜ் கன்சல்டென்ட்' துறை வழங்குகிறது.

ஒருவரை சந்திக்கும்போது கை குலுக்கி அறிமுகப்படுத்திக்கொள்ளும் முறை, வாழ்த்து, பாராட்டு தெரிவிக்கும் விதம், பேசும் விதம், தொலைபேசியில் உரையாடும் விதம், தகவல் பரிமாறும் முறை, நடை பாவனை, உடை அலங்காரம் என கவனிக்க வேண்டிய விஷயங்களை எல்லாம் 'இமேஜ் கன்சல்டென்ட்' துறை கற்றுத்தருகிறது. இந்த துறையில் தேர்ச்சி பெற்றவர்கள், ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே ஓரளவாவது அவரது குணாதிசயங்களை கண்டறிந்து விடுவார்கள்.

பொது மக்களோடு நெருங்கிப்பழகும் துறைகளில் இருப்பவர்களுக்கு 'இமேஜ் கன்சல்டென்ட்' வழிகாட்டும். அதன் மூலம் மற்றவர்கள் மத்தியில் அவர்கள் தங்களுடைய இமேஜை உயர்த்திக்கொள்ளலாம். மேலை நாடுகளில் பரவலாக நடைமுறையில் இருக்கும் இத்துறை பற்றிய விழிப்புணர்வு இலங்கையிலும் ஏற்பட ஆரம்பித்துள்ளது.

# பப்பாளி குறித்த ஆய்வு

ஒவ்வொரு வகையான பழத்திலும் பலவிதமான மருத்துவ நன்மைகள் நிறைந்துள்ளது என்பது நாம் அனைவருமே அறிந்த ஒரு விஷயமாகும்.

அப்படி இருக்கும் ஒருசில பழங்களை அன்றாடம் நாம் அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு வந்தால், அதுவே நமக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடும்.

அந்த வகையில், நாம் தினமும் அளவுக்கு அதிகமாக பப்பாளி பழத்தை சாப்பிட்டு வந்தால், பல்வேறு பக்க விளைவுகளை சந்திக்க நேரிடும்.

பப்பாளி பழத்தை அதிகமாக சாப்பிடுவதால் ஏற்படும் தீமைகள். பப்பாளிப் பழத்தில் கரோட்டீன்கள் நிறைந்துள்ளது, இதனை அதிகம் எடுத்துக் கொள்ளும் போது சரும பிரச்சனையை ஏற்படுத்துகிறது.

பப்பாளியில் ஒருவகையான என்சைம் காணப்படுகிறது, இந்தியாவில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் அதிகளவு என்சைம் உடலுக்கு சென்றால் தொண்டை வீக்கம், சளி, காய்ச்சல், நெஞ்செரிச்சல், ஆஸ்துமா, ஒவ்வாமை மற்றும் சுவாசம் தொடர்பான பிரச்சனைகளை ஏற்படுத்தும் என கண்டறியப்பட்டுள்ளது.

பப்பாளி பழத்தில் விட்டமின் சி நிறைந்துள்ளது, உயர் குருதி அழுத்தம், புற்றுநோயை எதிர்க்கும் ஆன்டி ஆக்சிடன்டாக விட்டமின் சி திகழ்கிறது, எனினும் விட்டமின் சி-யை குழந்தைகள் ஒருநாளைக்கு 1200 மில்லிகிராமுக்கு அதிகமாகவும், பெரியவர்கள் 2000 மில்லிகிரேமுக்கு அதிகமாகவும் எடுத்துக் கொள்ளும் போது சிறுநீரக கல் உருவாக்கத்தை தூண்டுகிறது.

அளவுக்கு அதிகமாக பப்பாளியை சாப்பிடும் போது இரைப்பை மற்றும் குடல் பிரச்சனைகளை ஏற்படுத்தி, வயிற்றில் ஒருவித எரிச்சல் மற்றும் செரிமான பிரச்சனையை ஏற்படுத்தும்.






# குழந்தைகளுடனான விளையாட்டு

குழந்தைகளுடனான விளையாட்டு உங்கள் மனத்திற்குத் தெம்பைத் தருவதோடு மட்டுமல்லாமல் உங்களை எப்பொழுதும் சுறுசுறுப்பாக வைத்திருக்க மிகவும் உதவியாக இருக்கும். உங்கள் குழந்தைகளுடன் நேரத்தை செலவிடுவதை விட மகிழ்ச்சியான ஒன்று என்று எதுவும் கிடையாது. அது உங்கள் குழந்தைகளோ அல்லது அக்கம் பக்கத்துக்கு குழந்தைகளோ, உங்களை மகிழ்விப்பதில் அவர்கள் தவறுவதே இல்லை.

பெற்றோராக உங்கள் குழந்தைகளோடு விளையாடுவது நீங்கள் செய்யவேண்டிய முக்கியமான பணிகளில் ஒன்று. விளையாட்டு குழந்தைகளுக்கு மட்டுமின்றி பெரியவர்களுக்கும் வாழ்வின் ஒரு முக்கிய அங்கமாகும்.

உங்கள் மனச்சோர்வைப் போக்க ஒரு குழந்தையை தோழனாக்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள். குழந்தைகளிடம் அதிக நேரம் செலவிடுவோர் அதன் மூலம் வாழ்வில் நல்ல மாற்றங்கள் நிறைய ஏற்படுவதாக நம்புகின்றனர்.

குழந்தைகளுடன் விளையாடுவது, அது உங்கள் சகோதர சகோதரிகளின் பிள்ளைகளோ அல்லது உங்கள் நண்பர்களின் குழந்தைகளோ, உங்களை இளைப்பாறச் செய்யும் (உங்களை ஊக்கம் கொள்ளச் செய்யும்).

குழந்தைகளுடன் விளையாடுவது மகிழ்ச்சியைத் தருவதால் உங்கள் மனம் புத்துணர்ச்சி பெற்று சோர்விலிருந்து விடுபடுவீர்கள்.

உங்கள் குழந்தைகளுடன் செலவிடும் நேரத்தில் நீங்கள் பொறுமையையும் புரிதலையும் கற்றுக்கொள்வதால் இது ஒரு முக்கிய பங்காற்றுகிறது.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் விளையாடுவது இருவருக்குமே மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் இடையே காணப்படும் சமூக மற்றும் உணர்வு சார்ந்த நடத்தைகள் மற்றும் அவர்களிடையே காணப்படும் பந்தம் ஆகியவற்றில் ஆக்சிடோசின் என்ற ஹார்மோன் முக்கிய பங்கு வகிக்கிறது, அது மனதிற்கு ஆறுதலையும் அமைதியையும் தருவதாகக் கருதப்படுகிறது.

குழந்தைகளுடனான விளையாட்டு உங்கள் மனத்திற்குத் தெம்பைத் தருவதோடு மட்டுமல்லாமல் உங்களை மேலும் சுறுசுறுப்படையச் செய்கிறது. ஒரே இடத்தில் அசையாமல் இருந்துகொண்டோ அல்லது டிவியை பார்த்துக் கொண்டோ இருப்பவர்களுக்கு அந்தப் பழக்கத்திலிருந்து வெளியே வரவும் இது உதவுகிறது. சதுரங்கம் (செஸ்) அல்லது புதிர் போட்டிகளை குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுவதால் மூளைக்கு சவால் விடுத்து சுறுசுறுப்பாக்குகிறது. மேலும் ஞாபக சக்தி தொடர்பான சிக்கல்களையும் சரி செய்கிறது.



# பொறுப்புள்ள மாணவன்

பொறுப்பற்ற மாணவன் என பலரும் உங்களை அழைக்கிறார்களா? கவலைப்படாதீர்கள். அவ்வாறான அனுபவம் எல்லோருக்கும் இருக்கிறது. ஆனாலும் மாணவன் என்ற வகையில் பாடசாலை உங்களுக்கு மிக முக்கியமானது. அங்கு நீங்கள் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும். அதற்கான சில வழிகாட்டல்கள் இதோ,

**1-வகுப்பிற்கு உரிய நேரத்திற்கு செல்லுங்கள்.**

ஒரு நிமிடமும் தாமதிக்காமல் வகுப்பிற்கு செல்லுங்கள். கற்பதற்கு தயாராக இருங்கள். அந்த நாளுக்கு தேவையான பொருட்களை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

**2-ஆசிரியரை மதியுங்கள்.**

படிக்கும் விடயத்தில் உங்களுக்கு ஆர்வம் இல்லாவிடினும் அதனை வெளிப்படுத்தாமலிருங்கள்.

ஆசிரியருடன் புன்னகையுடன் நல்ல முறையில் பழகுங்கள்.

பாடத்தில் ஆசிரியர் தரும் புள்ளிகளை ஏற்றுக்கொள்ளுங்கள்.

கற்பிக்கும் போது நேரத்தை அடிக்கடி பார்க்காதீர்கள். ஆசிரியரிடம் உங்களுக்குள்ள மரியாதை அதனால் குறைந்து விடும்.

**3-வகுப்பறையில் பண்பாடாக நடவுங்கள்.**

வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்களை வேண்டுமென்று குழப்பாதீர்கள். பாடத்தில் கவனமாக இருங்கள். யாராவது பாட நேரத்தில் உங்களுடன் கதைக்க வந்தால் அமைதியாக இருக்குமாறு சொல்லுங்கள். இல்லாத போது அவர்களை விட்டுவிடுங்கள். அடிக்கடி யாராவது தொந்தரவு செய்தால் ஆசிரியரிடம் சொல்லுங்கள். ஆசிரியரது வார்த்தைகளுக்கு மதிப்பளியுங்கள்.

**4-குறிப்பெடுங்கள்.**

இது மிக முக்கியமானது. நீங்கள் கூடுதல் புள்ளிகள் பெற விரும்பினால் மிக மிக முக்கியமானது. தெளிவாகவும் அழகாகவும் குறிப்பேட்டில் உங்கள் குறிப்புகளை எழுதிக்கொள்ளுங்கள். ஆசிரியர் கூறும் எல்லாவற்றையும் எழுதாதீர்கள். நீங்கள் தேவை என்று கருதும் குறிப்புகளை மாத்திரம் எழுதிக்கொள்ளுங்கள். வீட்டுக்கு அந்த குறிப்புகளை எடுத்துச்செல்லுங்கள். பயிற்சிகள் செய்ய அவை உதவும்.

**5-வீட்டுப் பயிற்சிகளை உரிய முறையில் செய்யுங்கள்.**

ஒவ்வொரு நாள் இரவிலும் வீட்டுப் பயிற்சிகளுக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள். நேர்த்தியாக அவைகளை செய்யுங்கள். யாரிடமாவது காட்டி சரி பாருங்கள். பிழைகள் இருந்தால் நீங்களாக திருத்துங்கள். உரிய நேரத்திற்கு பயிற்சிகளை செய்து காட்டுங்கள். ஒரு நாள் பாடசாலை செல்லாவிட்டால் ஆசிரியரை சந்தித்து படித்ததை கற்க முயற்சியுங்கள்.

**6-வகுப்பு மாணவர்களுக்கு உதவுங்கள். யாரையும் தொந்தரவு செய்யாதீர்கள்.**

பென்சில், பேனை அல்லது கொப்பி இல்லாத போது அவர்களுக்கு உங்களிடமுள்ளவற்றை கொடுத்து உதவுங்கள். எப்போதும் அடுத்தவர்களுக்கு உதவ தயாராக இருங்கள். உங்களுக்கு பிடிக்காதவர்கள் இருப்பினும் அவர்களோடு குழு வேலை செய்ய வேண்டி வந்தால் அவர்களுடன் அன்பாக பழகி வேலையை முடியுங்கள்.



தீர்




# யூடியூப் தொலைக்காட்சி

வலைத்தளமூலமாக பல்வேறு காணொளி காட்சிகளை பதிவேற்றியுள்ள யூ டியூப் நிறுவனம், தற்போது அடுத்த கட்ட அதிரடி திட்டமாக தொலைக்காட்சி சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

உலக நாடுகளில் பெரும்பான்மையாக பயன்படுத்தி வரும் யூ டியூப் வலைத்தள காணொளி சேவையானது, தற்போது கட்டண முறையிலான தொலைக்காட்சி சேவையை தொடங்கவுள்ளதாக, யூடியூப் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சூசன் வோஜிகி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவை மையப்படுத்தியதாக உருவாக்கப்படவுள்ள குறித்த தொலைக்காட்சி சேவையில், சுமார் 40 அலைவரிசைகளை ஒளிபரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த தொலைகாட்சி சேவைக்காக மாதமொன்றிற்கு 35 அமெரிக்க டொலர்கள் கட்டணமாக அறவிடப்படும் என்பதோடு, அமெரிக்காவின் முன்னணி ஒளிபரப்பு சேவை முகவர்கள், பிரபலமான சர்வதேச ஒளிபரப்பு சேவைகள் மற்றும் விளையாட்டு ஒளிபரப்புகள் என பல்வேறு வகைகளில் செயற்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூகுளுக்கு சொந்தமான யூடியூப் நிறுவனத்தின் காணொளி சேவையை, உலகலாவிய ரீதியில் தினமும் 1 பில்லியன் மணித்தியாலயங்கள் பயன்படுத்திவரும் நிலையில், தற்போது கூகுள் நிறுவனம், யூ டியூப் ஊடாக தொலைக்காட்சி சேவையை உருவாக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# BMW நிதானியங்கிகள்

உலகில் தானியங்கி கார்களை தயாரிக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே வருகிறது. பல்வேறு கார் தயாரிப்பு நிறுவனங்களும் புதிய ஒப்பந்தங்களின் மூலம் இணைந்து தானியங்கி கார்களை உருவாக்க பணியாற்றி வருகின்றன. அந்த வகையில் பி.எம்.டபுள்யூ. நிறுவனமும் தானியங்கி கார்களை தயாரிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏனைய நிறுவனங்களை போன்றல்லாமல் பி.எம்.டபுள்யூ. நிறுவனத்தின் தானியங்கி கார் லெவல் 5 தானியங்கி முறைகளை கொண்டிருக்கும் என கூறப்படுகிறது. மனிதர்களை போன்று எவ்வித சூழ்நிலையிலும் சாதுர்யமாக முடிவுகளை எடுத்து தானாகவே இயங்கும்படி லெவல் 5 தானியங்கி முறை இருக்கும்.

லெவல் 5 தானியங்கி முறைகள், சிறிதளவும் ஓட்டுநரின் ஒத்துழைப்பு இன்றி சாலைகளில் சாதுர்யமாக செல்லும். இந்நிலையில் தற்சமயம் சோதனை செய்யப்பட்டு வரும் தானியங்கி கார்களில் லெவல் 2 அல்லது லெவல் 3 என்ற தானியங்கி முறைகள் மட்டுமே வழங்கப்படுகிறது.

லெவல் 2 மற்றும் லெவல் 3 தானியங்கி முறைகளில் ஓட்டுநரின் கவனம் நிச்சயம் தேவை என்பதால் அனைத்து வித சாலைகளிலும் தானியங்கி முறையில் செல்லாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய தானியங்கி கார்களை தயாரிக்க பி.எம்.டபுள்யூ நிறுவனம் மற்றும் இஸ்ரேலை சேர்ந்த தானியங்கி தொழில் நுட்பங்களை உருவாக்கும் மொபைல்ஐ நிறுவனங்களுடன் சமீபத்தில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

# கரப்பான்பூச்சி உணவுகள்

பிரேசிலைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கரப்பான் பூச்சிகளைக் கொண்டு உணவுவகைகளைத் தயாரிக்கும் முயற்சியை ஆரம்பித்துள்ளார்கள்.

காரணம் இன்னும் 10 ஆண்டுகளில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்றும் இதனால் மக்கள் சத்தான உணவின்றி துன்பத்திற்கு ஆளாகும் சூழ்நிலை காணப்படுவதாலேயே இந்த உணவுகளை தயாரிப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

அத்துடன் சாதாரண கோதுமை மாவைவிட கரப்பான் பூச்சியினால் தயாரிக்கப்பட்ட மாவில் 70 வீத புரோட்டின் சத்துக்கள் இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனாலும் சுத்தமான இடங்களில் மரக்கறி மற்றும் காய்கறிகளை உண்டு வாழும் கரப்பான் பூச்சிகளே இதற்காக பயன்படுத்துவதாகவும் அவர்கள் கூறுகின்றார்கள்.



# இலங்கை முஸ்லிம்களின் பத்திரிகை வரலாறு



கலாபூஷணம்
எஸ்.ஐ.நாகூர் கனி

சரித்திரப் பாடத்தில், அரசர்களின் பெயர்களையும் வருடங்களின் வரிசைகளையும் மனனஞ் செய்ய வேண்டும். 'சுத்த போர் சார்' என இன்றைய மாணவர்கள் பொதுவில் சலிப்படைவதுண்டு. சரித்திரம் என்பது சலிப்படையும் சமாச்சாரமல்ல. 'நாம் வந்த வழி' இப்போது இருக்கும் இடம், இனி பயணப்பட வேண்டிய பாதை எதுவென உணர்த்தும் வழிகாட்டியே சரித்திரமாகும். மனித வாழ்வை நெறிப்படுத்துவது சரித்திரம்தான் என்பதாலேயே. சரித்திரம் இல்லாத ஒரு சமுதாயத்தை உணர்ச்சியற்ற மனிதனுக்கு ஒப்பிடுகின்றனர் வரலாற்றாசிரியர்கள்.

ஒரு சமுதாயத்தின் வரலாறு என்பது, பல வெட்டு முகங்களைக் கொண்ட ஒரு வைரக்கல்லைப் போன்றது. பள்ளிவாசல்களின் வரலாறு, பள்ளிக்கூடங்களின் வரலாறு போன்று, பல்வேறு துறைகளின் வரலாற்று உண்மைகளை ஒட்டுமொத்தமாகத் தருவதே, ஒரு சமுதாயத்தின் வரலாறாகும். இந்த பல்வேறு துறைகளில் ஒன்றாய் இந்நவீன உலகின் பிரதான முதன்மை சக்திகள் நான்கில் நன்றாய் இருப்பது ஊடகத் துறையாகும்.

இன்றைய காலத்தின் விஞ்ஞான வெளிச்சத்தில் விரிவு பல கண்டிருந்த போதும், அவற்றின் முதலுருவம் பத்திரிகைத்துறையேயாகும்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை, பத்திரிகைத் துறைக்கென தனியே ஒரு வரலாறு மட்டுமன்று, தனித்துவமான ஒரு வரலாறும் உண்டு. அந்த தனித்துவமான வரலாறு என்னவென்பது, இவ்வாக்கத்தின் இறுதியில் தேங்கி நிற்கும் ஓங்கியும் நிற்கும்.

இனி, இலங்கை முஸ்லிம்களின் பத்திரிகை வரலாற்று வழியில் ஊர் சுற்றி வலம் வருவோம் வாருங்கள் என வாஞ்சையோடு அழைத்தவனாய் எந்தன் எழுதுகோலை பூச்சுற்றிய கம்பமாய் தூக்கிப்பிடித்து முன்செல்வேன். அல்ஹம்து லில்லாஹ்.

'அலாமத் லங்காபுரி' என்றால், இது என்னவென விளிப்பீர்கள் என்ன மொழி என முகம் சுளிப்பீர்கள். இதுதான் இலங்கையில் முஸ்லிம்களால் கல்லச்சில் வெளியிடப்பட்ட முதல் பத்திரிகையாகும். இது மலாய் மொழியில் ஜாவி எழுத்துக்களில் வெளியானது. துவான் பாவா யுனூஸ் ஸல்தீன் என்னும் மலாயரே இதன் ஆசிரியராகப் பணியாற்றினார். இது 1869இல் வெளிவந்தது என்றால், இலங்கை முஸ்லிம்களின் பத்திரிகை வரலாற்றின் தோற்றுவாய் 1869ஆகும். அதாவது இலங்கை முஸ்லிம்களின் பத்திரிகை வரலாற்றுக்கு 147 வருடங்கள் (1986 - 2016) ஆகின்றன என்பதில் பெருமையுறலாம். முதல் பத்திரிகையின் முதல் எழுத்து, அகரத்தில் ஆரம்பமாகியிருக்கும் சீர்மை, நம் சிந்தனைக்கு விருந்தாகும்.

இதனைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து நெய்னா மரைக்கார் வாப்பு மரைக்காரை ஆசிரியராகக் கொண்டு 1873இல் 'புதினா லங்காபுரி' வார இதழாக வெளிவந்துள்ளது. இலங்கையின் புதினம் என்பது இதன் அர்த்தமாகும்.

இலங்கை முஸ்லிம் சமூக வானில் கல்வி, நாவல், பத்திரிகைத்துறை மூலம் விடியலை காண விழைந்த முன்னோடியான அறிஞர் சித்திலெப்பை, 'முஸ்லிம் நேசன்' என்னும் பெயரில் பத்திரிகையொன்றை ஆரம்பித்து நடத்தினார். இது 1882 இல் கண்டியிலிருந்து வெளிவந்தது. எட்டுப் பக்கங்களில் பிரதி திங்கள் தோறும் இது வெளிவந்தது 'ஞானதீபம்' எனும் பத்திரிகையையும் அறிஞர் சித்திலெப்பையே ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்தினார். இது சிறிது காலமே வெளிவந்தது எனலாம்.

'முஸ்லிம் நேசன்' வெளிவந்ததைத் தொடர்ந்து கீழ்வரும் பத்திரிகைகள் வெளியாகி, பின்னாட்களில் கண்மூடிய வரலாறு சோகமானது. 1886 இல் கொழும்பிலிருந்து 'சர்வ சன நேசன்' வெளிவந்தது. இதன் ஆசிரியர் முஹைதீன் என்பவராவார். அடுத்து, அரபுத் தமிழ் மொழியில் செய்யது

முஹம்மத் ஹுசைன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு 'கஷ்புல் குர்ஆன் அல் கல்பில் ஜான்' எனும் பெயரில் வெளிவந்தது. அ.அப்துல் ரஹ்மான் என்பவரை ஆசிரியராகக் கொண்டு, 1890 இல் 'சைபுல் இஸ்லாம்' வெளியானது. அடுத்து, அ.மு.நைனா என்பவரால் 1892 இல் 'ஞானதீப சங்காரம்' எனும் பத்திரிகையும், எம்எல்.உதுமான் என்பவரால் 1895இல் 'இஸ்லாம் மித்திரன்' எனும் பத்திரிகையும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

'இஸ்லாம் மித்திரன்' ஏட்டுக்கு இதழியல் வரலாற்றில் முக்கியமான ஓர் இடமுண்டு. முஸ்லிம் ஒருவரினால் நடத்தப்பட்ட முதல் நாளிதழ் என்பதுவே, அதற்கான காரணமாகும். வசதி வாய்ப்பும் - அனுபவமும் குறைவான அக்காலத்தில், எடுத்த எடுப்பிலேயே அது நாளிதழாக முகம் காட்டாமல், ஆரம்பத்தில் மாதமிருமுறை எனத் துவங்கி, பின்னர் வாரம் இருமுறை என வெளிவந்து, 1897 ஜுலை 20ஆம் திகதி முதல் தினசரியாக வெளிவரலாயிற்று. இது 'இஸ்லாம் மித்திரன்' 1906 வரை வெளிவந்தமை அக்காலத்திய சாதனையே!

20ஆம் நூற்றாண்டின் முதல் பத்திரிகையாக 1900இல் 'முஸ்லிம் பாதுகாவலன்'




ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் என்பவரால் கொழும்பிலிருந்து வெளிவந்தது. இவ் ஏட்டுக்கு ஒரு சிறப்புண்டு.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தொட்டெழுதி வெளிவந்த பத்திரிகை 'முஸ்லிம் பாதுகாவலன்' ஆகும். இதன் ஒரு பகுதியை The Muslim guardian எனும் பெயரிலும் ஆங்கிலத்திலும் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் வெளிக்கொணர்ந்தமை அன்றைய புதுமையும் சிறப்புமாகும். இதன் முதல் இதழ் 04 ஜனவரி 1801இல் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் பின் 1906இல் 'மிஸ்பா ஹுல் இஸ்லாம்' எனும் ஏடும், 1909இல் 'முஸ்லிம்' எனும் ஏடும், பத்தாண்டுகளுக்குப் பிறகு 1919இல் 'ஹிதாயத்துல் இஸ்லாம்' ஏடும், மறு ஆண்டு 1920இல் 'சம்சுல் இஸ்லாம்' எனும் ஏடும் வெளிவந்துள்ளமை அவதானிக்கத் தக்கது.

அடுத்து, எட்டாண்டுகளின் பின் அதாவது 1928இல் கொழும்பு வாழைத்தோட்டத்திலிருந்து மீரான் முஹிதீன் என்பவர் ஆசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் பணியாற்ற வெளிவந்த 'தினத் தபால்' எனும் தினசரிக்கு ஒரு சிறப்புண்டு. ஒரு செய்திப் பத்திரிகைக்குரிய இலக்கணங்களைத் தழுவி வெளிவந்த முதல் நாளிதழ் என்பதுவே அந்த சிறப்புக்குக் காரணமாகும். இது கொழும்பில் ஒரு சதமாகவும் வெளியூர்களில் இரண்டுசதமாகவும் ஈராண்டுகளாகத் தொடர்ந்து வந்தமை நோக்கற்பாலது.



அடுத்து 1935இல் ஆங்கிலத்தில் 'சிலோன் மூர்' எனும் நாமத்தில் ஓரிதழ் வெளிவந்து சின்னாட்களில் கண்மூட, 1939இல் அன்பர் பூபதிதாசர் என்பவர் ஆசிரியராகக் கடமையாற்ற 'ஞானக் கடல்' எனும் இதழ் வெளிவந்தது. கொழும்பு 114 லெயார்ட்ஸ் புரோட்வேயில் இயங்கிய 'அன்பு மார்க்க சங்கம்' என்ற ஞான அமைப்பின் தலைவரான அன்பர் பூபதிதாசரே. 86 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் 'வீரகேசரி'யில் தமிழ் பேசும் முஸ்லிம் உலகச் செய்திகள் எனும் தலைப்பில் தனிப்பக்கம் ஒதுக்கச் செய்து நீண்ட காலம் நடத்தி வந்த பெருமைக்குரிய பெருமகனாவார். 1940இல் 'அல் இஸ்லாம்' எனும் இதழும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. மௌலவி அப்துர் ரஸாக் (ஜமாலி) என்பவர், 'அல்இல்ம்' இதழுக்கு ஆசிரியராகப் பணியாற்றியமை ஆய்வுத் தேடலுக்கு ஆவணமாகும்.

இலங்கையில் அதிக பத்திரிகைகளை வெளியிட்ட சிறப்புக்குரிய சிங்கார பூமியாக கொழும்பு, வாழைத்தோட்டத்திலிருந்து 1946 இல் கே.எம்.எம்.சாலிஹ் இஸ்லாமிய தாரகை வாராந்தரிக்கு, இலங்கையில் வேறு எந்த மொழி பத்திரிகைக்கும் கிட்டாத ஒரு சிறப்புண்டு. இந்திய அரசினால் தடை செய்யப்பட்ட முதல் - ஒரே இதழ் இந்த 'இஸ்லாமிய தாரகை' யேயாகும். ஏனெனில் அக்காலப் பிரிவில் கருக்கட்டிய 'பாகிஸ்தான் சிந்தனைக்கு' ஆக்கங்களைச் சார்பாக பிரசுரித்து ஊக்கம் தந்தமையே இந்த 'இஸ்லாமிய தாரகை' யின் ஆசிரியர் கே.எம்.எம்.சாலிஹ் ஏரிக்கரை வீட்டின் Lake house தமிழ் - ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு ஒப்புநோக்காளராக முதலில் கடமையாற்றியமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

'இஸ்லாமிய தாரகை' யின் செல்வழி 'சரிவான' பார்வைகளுக்கு உள்ளூரில் சாமரம் வீசிவிடக் கூடாதே எனும் சமூகப் பிரக்ஞையில், எம்.எம்.அப்துல் காதர் எனும் வாழை வாரிசு 'முஸ்லிம் லங்கா' எனும் ஏட்டை 1947இல் ஆரம்பித்து நடத்திய ஆழம், இன்றும் அசைபோடத் தக்கது.

மறு ஆண்டு அதாவது 1948இல் எஸ்.எம்.எம்.முஹிதீன் என்பவரால் 'தோழன்' என்னும் பத்திரிகை வாழைத் தோட்டத்திலிருந்து வெளிவந்தது. ஈராண்டுகளே வாழ்ந்தது இந்த தோழ(ன்)ர் எஸ்.எம்.எம்.முஹிதீன், முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் ஆரம்ப கால அரசியல் பேச்சுக்களின் தமிழ் மொழிபெயர்ப்பாளராக மேடைகள் தோறும் தமிழ் வாடைவீசிய பேச்சாளருமாவார்.

20ஆம் நூற்றாண்டின் பின் அரைக் காலப் பகுதியில் (1950 - 2000) பெருந்தொகையான பத்திரிகைகள் முஸ்லிம்களால் வெளியிடப்பட்டன. அவற்றுள் விரல்விட்டு எண்ணத்தக்க சில, இப்போதும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மற்றவை எல்லாம் நாளடைவில் கண்மூடிவிட்டன. கிடைத்த தகவலின் அடிப்படையில், அவற்றின் பெயர்களையும், அவை பிறந்த ஆண்டுகளையும் கீழே வரிசைப்படுத்துவோம்.

1950இல் 'நவயுகம்' 1951இல் 'சமுதாயம்' 1952இல் 'முஸ்லிம் தோழன்' 1953இல் 'முஸ்லிம் உதயம்' 1954இல் 'முன்னேற்ற முழக்கம்' 1955இல் 'அருள் ஜோதி' 'உண்மை உதயம்' 1957இல் 'தீனுல் இஸ்லாம்' 1958இல் 'சரன்தீப்' 'வழிகாட்டி' 'கலைக்கடல்' 1959இல் 'அஹதியா சுடர்' என்பனவாகும்.

1960 - 1969 வரையான பத்தாண்டு காலத்தில் பிரபலமான எழுத்தாளர்கள் சிலர் பத்திரிகைகள் வெளியிட்டிருக்கும் 'கனதியை' இங்கு தொட்டுக்காட்டுவது, ஆய்வு மாணவர்களை ஆனந்தப்படுத்தும் என்பதால், அவர்களுடன் கைகுலுக்குவோமே.

1960இல் 'இளம்பிறை' எம்.ஏ.ரஹ்மான், 'மணிக்குரல்' எம்.ஸி.எம்.சுபைர், 'தாரகை' எச்.எம்.பி.முஹிதீன், 1961இல் 'மரகதம்' சுபைர் இளங்கிரன், 'கலைமுரசு' 1964 இல் 'புதுப்பாதை' 'அல் மதீனா' எம்.பி.எம்.மாஹிர், 'தீனுல் இஸ்லாம்', 1965இல் நிலா, மானா மக்கீன், 1996 இல் 'உம்மத்' எச்.எம்.பி.முஹிதீன், 1967இல் 'மாணவ முரசு', 1967இல் 'இன்ஸான்' அபுதாலிப் அப்துல் லத்தீப், 'ஜிஹாத்' எம்.பி.எம்.மாஹிர், 1968இல் 'அல் இஸ்திராக்கி', 'உம்மாத்' எச்.எம்.பி. முஹிதீன், மக்கள் காதர், 1969இல் 'கவிஞன்' 'மாணவன்' ஆகும். 1970 - 1979 வரையிலான பத்தாண்டுகளில்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# உலக நீர் தினத்தை கொண்டாடும் பரந்தன் கெமிக்கல்ஸ்

சுத்தமான நீரின் அவசியத்தையும் நீர் வளங்களை நிலைபேரான முறையில் முகாமைத்துவம் செய்வதன் முக்கியத்துவத்தையும், முன்னிறுத்தி உலக நீர்த்தினமானது வருடாந்தம் மார்ச் மாதம் 22ம் திகதி கொண்டாடப்படுகிறது.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் இயங்கும் பரந்தன் கெமிக்கல்ஸ் நிறுவனமானது, நாட்டிற்கு அவசியமான சிறந்த குடிநீரை வழங்கிவரும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையுடன் இணைந்து நீர் தினத்தை கொண்டாடுவதில் பெருமிதமடைகிறது. பரந்தன் கெமிக்கல்ஸ் நிறுவனம் ஐந்து தசாப்த காலத்திற்கு மேலாக திரவ குளோரினை வெற்றிகரமாக விநியோகித்து வருவதுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நாடளாவிய செயற்பாட்டில் இணைந்து செயற்படுவதில் பெருமிதமடைகிறது. உலக நீர்த்தினத்தின் இவ்வருடத்திற்கான தொனிப்பொருள் நீர் மற்றும் கழிவு நீர் என்பதாக அமைவதுடன் இத் தொனிப்பொருளானது நாட்டின் நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்திற்கு மிகவும் அவசியமான இரசாயனங்களை வழங்கிவரும் பரந்தன் கெமிக்கல்ஸ் நிறுவனத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பை காட்டுகிறது.

பரந்தன் கெமிக்கல்ஸ் நிறுவனமானது நாட்டின் இரசாயனங்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்துவதற்கான அரச நிறுவனமாகும். இந் நிறுவனமானது குளோரின் தொடர்பில் ஏகபோக உரிமையை கொண்டுள்ளதுடன் (மொனோபொலி) நிறுவனமானது 1954ம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது முதல் குளோரினுக்கான உள்ளூர் தேவையை பூர்த்தி செய்து வருகின்றது. வரலாற்று ரீதியில் நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் குளோரினேற்றம் செய்வதானது 1893ல் ஜேர்மனியில் நிகழ்ந்ததுடன் 1897ம் வருடத்தில் பிரித்தானியாவின் மெயிட்ஸ்டோன் நகரிலேயே ஆரம்பத்தில் முற்று முழுதாக நீர் வழங்கலின் போது குளோரினால் சுத்திகரிக்கப்பட்டது.




ஆயினும் நிரந்தரமாக குளோரினேற்றமானது இங்கிலாந்தின் லிங்கன் நகரத்தில் மாசடைந்த நீர் காரணமாக நெருப்புக் காய்ச்சல் ஏற்பட்டமையால் 1905ம் ஆண்டில் வைத்தியர் அலக்ஸாண்டர் ஹஸ்டன் அவர்களால் நீரை குளோரினேற்றம் செய்வதன் மூலம் தொற்று நோயை தடுக்க முடிந்ததுடன் ஓர் முன்னெச்சரிக்கையாக குளோரினேற்றம் தொடர்ந்தது.

பொதுவாக குளோரினானது நீர் சுத்திகரிப்பில் பெரும்பாலும் பாவிக்கப்படும் இரசாயனம் மட்டுமன்றி மிகவும் திறன் மிக்க தொற்றுநீக்கியாகும். குறிப்பாக நீரில் பரவும் நோய்களான கொலரா, வாந்திபேதி மற்றும் நெருப்பு காய்ச்சல் போன்ற நோய்கள் பரவுவதை தடுக்க உதவுகிறது.

குளோரின் போன்ற இரசாயனங்களை உற்பத்தி செய்தல் மற்றும் கையாள்வதில் குறிப்பிட்டளவு ஆபத்துக்கள் அடங்கியிருப்பினும் நிறுவனம் பல தசாப்தகாலமாக பெற்றுக் கொண்ட தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான அறிவு காரணமாக இதனை வெற்றிகரமாக செயற்படுத்துவதானது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். மேலும் நிறுவனமானது நீர்ச் சுத்திகரிப்பிலும் கழிவு நீர் முகாமைத்துவத்திலும் பிரயோகிக்கப்படும் சோடியம் ஹைபோகுளோரைட், ஐதரோகுளோரிக் அமிலம், வெளிற்றும் தூள் மற்றும் கோஸ்டிக் சோடா ஆகியனவற்றை சந்தைப்படுத்துகின்றது.

பருகுதல் மற்றும் வீட்டுப்பாவனைக்காக அதிகரித்துவரும் சுத்தமான நீரின் தேவை மற்றும் கைத்தொழில் துறையில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி காரணமாக நீர்ச் சுத்திகரிப்பிற்கு அவசியமான இரசாயனங்களிற்கான தேவை அதிகரிக்கவிருப்பதனால் பரந்தன் இரசாயன நிறுவனமானது மேலும் இரசாயனங்களை அறிமுகப்படுத்துவதற்கும் உற்பத்தி கொள்திறனை விருத்தி செய்வதிலும் களஞ்சியசாலையை விரிவுபடுத்துவதன் மூலம் அவசியமான இரசாயனங்களை போதியளவில் வைத்திருப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நிறுவனமானது தனது கடந்த காலத்தில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில்துறைக்கு அவசியமான முக்கிய இரசாயனங்களை வழங்குவதன் மூலம் நீர்ச் சுத்திகரிப்பிலும் கழிவு நீர் முகாமைத்துவத்திலும் தொடர்புபட்டு நாட்டின் பொதுச்சுகாதாரம் மேன்படுவதில் பாரிய பங்களிப்பை செய்துள்ளது. பரந்தன் கெமிக்கல்ஸ் நிறுவனமானது, சுகாதாரமான நீரை வழங்குவதன் மூலம் நாட்டில் சிறந்த சேவையை ஆற்றிவரும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையுடன் இணைந்து உலக நீர் தினத்தை கொண்டாடுவதில் பெருமிதமடைகிறது.



# கிழக்கு மாகாணத்தின் சகல அரச அலுவலகங்களிலும் வாரத்தில் இரு நாட்கள் இரண்டு மணி நேர டெங்கு ஒழிப்பு சிரமதானம்

**மாகாண முதலமைச்சர் உத்தரவு**



**(ஏறாவூர் நிருபர் - ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

கிழக்கு மாகாணத்தில் உயிராபத்தையும், பீதியையும் ஏற்படுத்தி வரும் டெங்கு நோய்த் தாக்கத்தை இல்லாதொழிப்பதற்காக கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து அரசாங்க அலுவலகங்களிலும் வாரத்தில் திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய இரு தினங்களும் தலா இரண்டு மணித்தியாலங்கள் முழுமையான சிரமதானத்தில் ஈடுபட வேண்டும் என்ற பணிப்புரை மாகாண சபையால் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

டெங்கு நோயினை இல்லாதொழித்தல் மற்றும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகிப் பெருகுவதைக் கட்டுப்படுத்தல் போன்ற செயற்றிட்டங்களை ஆராயும் விஷேட கலந்துரையாடல் கிழக்கு மாகாண முதலமைச்சர் பொறியியலாளர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தலைமையில் ஏறாவூர் செய்னுலாப்தீன் ஆலிம் வாவிக்கரைப் பூங்காவில் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.

இதில் முப்படை அதிகாரிகள், உள்ளூராட்சி நிருவாக அதிகாரிகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் சமூக நல நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய முதலமைச்சர், வைத்தியசாலைகளைத் தவிர மற்றெல்லா அரச அலுவலகங்களிலும் திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் காலை 10.30 மணிவரை இரண்டு மணித்தியாலங்கள் முழுமையான சிரமதானங்கள் செய்யப்பட வேண்டும் என்று மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்த உத்தரவு டெங்கு அபாயம் தணியும் வரை கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டும்.

டெங்கு நுளம்புகள் பரவுவதற்குத் தோதாக இடங்களை வைத்திருப்போர் மீது எந்த வித தயவு தாட்சண்யமும் பாராது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் நான் உள்ளூராட்சித் திணைக்களங்களை அறிவுறுத்தியுள்ளேன்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்திற்கு பின்னர் அடுத்த நிலையில் டெங்கு எச்சரிக்கைப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டம் இனங்காணப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனவரியிலிருந்து டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்த வண்ணமே காணப்படுவதை வைத்தியசாலைத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

மார்ச் மாதத்தில் கடந்த இரு வாரங்களுக்குள் டெங்கு நோயாளர் மட்டக்களப்பு நகரில் 119 பேர், களுவாஞ்சிக்குடி 65, ஏறாவூர் 77 பேர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி, மட்டக்களப்பு நகர், மற்றும் காத்தான்குடி ஆகிய இடங்களில் தலா ஒரு மரணம் என்ற அடிப்படையில் இது வரை 3 மரணங்கள் சம்பவித்துள்ளன.

மேலும் அதி தீவிர கண்காணிப்பில் இருவர் என்ற நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளார்கள்.

1219 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

ஏறாவூரும் கிட்டத்தட்ட எச்சரிக்கப்பட வேண்டிய பிரதேசமாக உள்ளது.

ஏறாவூர்ப்பற்று பிரதேசத்திலுள்ள மிச்நகர் கிராமத்தில் மாத்திரம் இதுவரை 148 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற ஒரு எச்சரிக்கை உணரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று உட்பட எல்லா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்து வருகின்றது.

தென்னிலங்கையில் 25 ஆயிரம் இடர்காப்பு பெண்கள் தொண்டர் அணி உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது.

அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் குறைந்தபட்சம் மாவட்டத்தில் 500 பேராவது இடர்காப்பு தன்னார்வத் தொண்டர் அணி உருவாக்கப்பட வேண்டும்.

# அல்லாமா ம.மு. உவைஸின் நினைவுக் கருத்தரங்கு

**(எம்.சி. அன்சார் - சம்மாந்துறை)**



தென்கிழக்கு பல்கலைக்கழகக் மொழித் துறை பிரிவு ஏற்பாடு செய்துள்ள போராசிரியர் அல்லாமா ம.மு. உவைஸ் நினைவுக் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (26) கல்கிஸ்ஸ கல்விசார் செயற்றிட்ட மையத்தில் நடைபெறவுள்ளது.

'உவைஸ் வழியில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பணிகள்' என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கின் அங்குரார்ப்பண அமர்வு தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் போராசிரியர் றமீஸ் அப்துல்லாவின் தலைமையில் காலை 9.30மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறும். இதில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் போராசிரியர் எம்.எம்.எம்.நாஜிம், கலை, கலாசார பீட அதிபதி எம்.எல்.பௌசுல் அமீர், தமிழ் நாடு சட்டசபை முன்னாள் உறுப்பினர் குத்துஸ் ஹஸனலி, பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் ஆகியோர் உரையாற்றுவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை முன்னாள் தலைவர் போராசிரியர் எஸ்.தில்லைநாதன் தலைமையில் முதலாவது கருத்தரங்கு நடைபெறுவதோடு 'இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு' என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சே. யோகராசாவும் 'இஸ்லாமியத் தமிழ் இலக்கிய பதிப்பு முயற்சிகள்' எனும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸும் உரையாற்றுவர்.

இரண்டாவது கருத்தரங்கு ஜாமிஆ நளீமியா பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரியின் தலைமையில் நடைபெறவுள்ளது. 'இஸ்லாமிய தமிழ் இலக்கிய உரைகளும் தொகுப்புக்களும்' என்ற தொனிப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை முன்னாள் தலைவர் போராசிரியர் அ. சண்முகதாசும் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுகள்' எனும் தலைப்பில் பேருவளை ஜாமிய நளீமியா முதுநிலை விரிவுரையாளர் அஷ்ஷேக் எஸ்.எச். பழில் (நளீமி)யும் உரையாற்றவுள்ளனர்.

நிறைவரங்கு தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜிம் தலைமையில் நடைபெற ஏற்பாகியுள்ளது. 'தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் அடையாளம்' எனும் நூல் வெளியிடப்பட உள்ளதோடு தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க. இரகுபரன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் போராசிரியர் எம்.எல்.ஏ. காதர் ஆகியோர் இதில் உரையாற்றவுள்ளனர்.

# அல்-ஹிதாயாவின் 2002ஆம் ஆண்டு பழைய மாணவர்களின் ஒன்றுகூடல்

கோறளைப்பற்று மேற்கு கல்வி கோட்டத்திற்குட்பட்ட மீராவோடை அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தில் 2002ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை எழுதிய பழைய மாணவர்களின் முதலாவது ஒன்றுகூடல் 21ஆந் திகதி-செவ்வாய்க்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.

இவ்வொன்றுகூடலானது மீராவோடை அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தில் 11 வருட காலத்தின் பிற்பாடு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவினை மையப்படுத்தியே இடம்பெற்றதோடு, இவ்வாறானதொரு சந்திப்பு ஒன்றினை மேற்கொள்வதற்கு தமக்கு வழி அமைத்து தருவதற்கு இப்பாடசாலையில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவே காரணம் என அனைவரும் தெரிவித்துக்கொண்டதோடு, இச்சந்தர்ப்பத்தில் தம்முடன் கல்வி கற்று தற்பொழுது வெளிநாட்டிலுள்ள நண்பர்களையும் ஞாபகப்படுத்திக்கொண்டனர்.

மேலும், இச்சந்திப்பின்போது தங்களது பாடசாலையில் கல்வி கற்ற அனுபவங்களை அனைவரும் பகிர்ந்து கொண்டதோடு, தாம் இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் என்ற நோக்கத்துடன் இப்பாடசாலைக்கு தங்களால் இயன்ற உதவிகளை எதிர்காலத்தில் வழங்குவதென்றும் இக்கூட்டத்திற்கு வருகை தராத தம்முடன் கல்வி கற்ற ஏனைய நண்பர்களையும் நேரில் சந்தித்து தமது பாடசாலையில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழா தொடர்பாக தெரியப்படுத்துவது என்றும், இப்பரிசளிப்பு விழாவுடன் தமது ஒன்றுகூடல் நின்று விடாது தொடராக இச்சந்திப்புக்கள் இடம் பெற வேண்டுமென்றும் தீர்மானித்துக்கொண்டனர்.

# திருமலை பட்டதாரிகள் எதிர்க்கட்சித் தலைவருடன் சந்திப்பு



**(ஏ.ஆர்.எம். றிபாஸ் கிண்ணியா செய்தியாளர்)**

திருகோணமலை வேலையற்ற பட்டதாரிகள் 21ஆம் திகதி காலை எதிர்க்கட்சி தலைவர் இரா சம்பந்தனை அவரது வீட்டில் சந்தித்துப் பேசினார்கள்.

தங்ககளுக்கு அரச துறையில் வேலை வாய்ப்பை பெற்றுத் தருமாறும் படித்து முடித்து பல வருடங்களாக கஷ்டப்படுவதாகவும் புறக்கணிக்கப்படுவதாகவும் கூறினார்கள்.

அதற்கு பதிலளித்த எதிர்க்கட்சி தலைவர் பட்டதாரிகளது பிரச்சினைகளுக்கு ஒரு முடிவை பெற்றுத்தருவதற்கு முயற்சிப்பதாகவும் இவ்விடயம் தொடர்பாக உயர் மட்டங்களுடன் பேசி நல்ல முடிவை பெற்று தருவதற்கு முயற்சி எடுக்கின்றேன் எனவும் கூறினார்.

# அஹதிய்யா கருத்தரங்கு

**(யு.எல். முஸம்மில்)**

குருநாகல் மாவட்ட அஹதிய்யா ஆசிரியர்களுக்காக அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளனம் நடாத்தும் வழிகாட்டல் கருத்தரங்கு தொடரில் முதலாவது கருத்தரங்கு இம்மாதம் 26ந் திகதி நடைபெறும்.

சியம்பலாகஸ்கொடுவ தாருல் அர்கம் கலாசார நிலையத்தில் இம்மாதம் 26ந் திகதி ஞாயிற்றுக் கிழமை 8மணி முதல் மாலை 4.30மணி வரை நடைபெறும் இந்நிகழ்வில் அஃலாக், பிக்ஹநில் இஸ்லாம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கு நடைபெறும்.

குருநாகல் மாவட்ட அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளனத் தலைவர் கலாநிதி அல்ஹாஜ் பீ.எம். பாரூக் தலைமையில் துறைசார் வளவாளர்களைக் கொண்டு நடாத்தப்படும் இக்கருத்தரங்கின் இறுதியில் பங்கு பற்றியோருக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும் என்று செயலாளர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். நிஸாம் தெரிவித்தார்.

# வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலையின் அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம்

**(வெலிகம நிருபர்)**

வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலையின் பாடசாலை அபிவிருத்தி சங்க பொதுக் கூட்டம் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி எஸ். ஸனூலா தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

பாடசாலையின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி அதிபர் உரையாற்றவுள்ளதோடு, சென்ற வருட (2016) செயலாளர் அறிக்கை, மற்றும் கணக்கறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

மாணவர்களது கல்வி நலன் கருதி சகல பெற்றோர்களும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி வேண்டப்படுகின்றனர்.

# சுஜீவ சேனசிங்க பவுண்டேஷன் ஏற்பாட்டில் மகளிருக்கான இலவச பயிற்சிநெறிகள்



**(ஏ.எஸ்.எம். ஜாவித்)**

முயற்சியினால் முன்னேறும் தேசத்தின் மகளிருக்கு உதவி அவர்களை வலுவூட்டுவோம் எனும் தொனிப்பொருளில் சர்வதேச வர்த்த இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் அனுசரணையில் சுஜீவ சேனசிங்க பெண்கள் பவுண்டேஷன் மூலம் கொழும்பு வாழ் மகளிருக்கு இலவச ஆடைப் பயிற்சி நெறி, மட்பாண்ட வேலைப்பாட்டுப் பயிற்சி நெறி, மலர் அலங்காரம், ஒட்டுத் தொழில், சமையல் கலை, மணப்பெண் அலங்காரம் போன்றவற்றிற்கான மூன்று மாதப் பயிற்சி நெறியை எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக தெரிவு செய்யப்பட்ட மகளிரைச் சந்தித்து தெளிவூட்டும் நிகழ்வு பிரதமரின் கொழும்பு மாவட்ட செயலாளர் எஸ்.எம்.எம்.இஸ்மத் தலைமையில் கடந்த சனிக்கிழமை (18) வாழைத்தோட்டம் பிரதீபா வரவேற்பு மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்போது சுஜீவ சேனசிங்க பெண்கள் பவுண்டேஷன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனோஜி சமரவீர, அமைச்சரின் பிரத்தியோச் செயலாளர் ரணில் ஆட்டிகல, அமைச்சரின் கொழும்பு மத்திய இணைப்பாளர் நிஷாட், அமைச்சரின் கெசல்வத்த இணைப்பாளர் எம்.சப்ரிஸ் உள்ளிட்ட சுமார் 700க்கும் மேற்பட்ட மகளிர் கலந்து கொண்டிருந்தனர். இவர்களுக்கான பயிற்சியின்போது பயிற்சிப் பொருட்கள் அமைச்சரினால் இலவசமாக வழங்கப்படவுள்ளதுடன் அரச அங்கீகாரம் பெற்ற தொழில் பயறிச்சி சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறி வேலைத்திட்டத்திற்கு மேலதிகமாக இப்பகுதியில் சுகவீனமுற்றிருக்கும் பிள்ளைகளுக்கு உதவித் தொகைகளும் வழங்கப்பட்டன.

# விசேட தேவையுடைய 80 மாணவர்களுக்கு மு. பி. ச. உறுப்பினர் அஸ்ஹர் ஏற்பாட்டில் உதவி

**(அஹமட் ஸிறாஜ் இஸ்ஸதீன்)**




அக்கரைப்பற்று முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எம். அஸ்ஹரின் ஏற்பாட்டில் விசேட தேவையுடைய வசதி குறைந்த பாடசாலை மாணவர்களுக்கு உதவி வழங்கல். மற்றும் இலவச குடி நீர் இணைப்புக்கான பத்திரம் வழங்கும் நிகழ்வு என்பன அக்கரைப்பற்று பள்ளிக் குடியிருப்பு றஹீமியா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக உள்ளூர் அரசியல் பிரமுகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது விசேட தேவையுடைய மற்றும் பாடசாலை செல்லும் வசதி குறைந்த சுமார் 90 மாணவர்களுக்கு கற்றல் உகபரணங்கள் மற்றும் பாதணிகள் பெற்றுக் கொள்வதற்கான வவுச்சர் மற்றும் குடி நீர் இணைப்புக்கான பத்திரங்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

அக்கரைப்பற்று முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எம்.அஸ்ஹரின் முயற்சியினால் இதுவரை அக்கரைப்பற்று பள்ளிக் குடியிருப்பு பிரதேசத்தில் வசித்துவரும் வசதி குறைந்தவர்களுக்கான உதவி வழங்கும் திட்டத்திற்கமைவாக 250 குடும்பங்களுக்கு இலவச குடி நீர் இணைப்புக்களும் 150க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு மின்சார இணைப்புக்களும் பெற்றுக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மீலாதுன் நபி போட்டி முடிவுகளில் பரிசு பெற்றோர்

**(புத்தளம் நிருபர்)**

பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் இஸ்லாமிய எழுத்தறிவை மேம்படுத்தும் நோக்கில் புத்தளம் மாவட்ட சமூக நலப் பேரவையினால் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட மீலாதுன் நபி போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம் முஹம்மது நபி ( ஸல் ) அவர்கள் காட்டித்தந்த அந்நிய சமூகத்துடனான சகவாழ்வு என்ற தலைப்பில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றோர் .

என்.எப். றிஸ்மினா- திருகோணமலை, எச்.என். அம்லக் முஹம்மத் - புத்தளம், எம்.எஸ்.நஜ்லா - காசிம் சிட்டி, ஏ.ஆர். எப்.எப்.ஆர் ஆராஹ் -புத்தளம் மாண்பு நிறை மாநபியே என்ற தலைப்பில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பரிசு பெற்றோர்.

எம்.ஐ. அஹ்மத் லெப்பே - சம்மாந்துறை, எம்.எஸ்.அப்துர் ரஹீம் - புத்தளம், திருமதி கே.ஏ. ரஹீம் - நீர்கொழும்பு, ஐ.எஸ். நிஸாம் ஷரீப் - கொழும்பு, சுபைர் சியாம் - புத்தளம்.

பரிசளிப்பு தொடர்பான விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்று போட்டிக் குழு செயலாளர் எம்.ஏ.எம். அப்பான் தெரிவித்துள்ளார்.

# தெ. மாகாண பதில் கல்வி அமைச்சராக எச்.டபிள்யூ. குணசேன

**(வெலிகம நிருபர்)**

தென்மாகாண பதில் கல்வி அமைச்சராக தென்மாகாண மீன் பிடித் துறை அமைச்சர் எச்.டப்ளியூ. குணசேன நேற்று முன்தினம் தென்மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

தென்மாகாண கல்வி அமைச்சர் ஷந்திம ராஜபுத்திர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் ரஷ்யா நாட்டுக்கு விஜயம் செய்துள்ளதால், அவர் நாடு திரும்பும் வரை அமைச்சர் குணசேன பதில் கல்வி அமைச்சராக கடமை புரிவார்.

# மனித வலு முறைமை என்பது என்ன?

டெலிகொம் மனித வலு தொழிலாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கோரி கடந்த மூன்று மாதங்காளகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கொழும்பு பல்கலைக்கழக டெலிகொம் மனித வலுத் தொழிலாளர் போராட்டத்திற்கான ஒத்துழைப்பு இயக்கம் இப்போராட்டத்தை ஆதரித்து அறிக்கை ஒன்றை விடுத்து தமது ஒருமைப்பாட்டினைத் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் நீங்களும் ஒரு மனித வலு தொழிலாளர் ஆக இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

இலங்கை டெலிகொம் மனித வலு தொழிலாளர்கள் நிரந்தர நியமனம் கோரி கடந்த 78 நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நிரந்தரமான தொழில்களை வழங்குவதற்குப் பதிலாக நிரந்தரமற்ற தொழில்களை உருவாக்கும் மனித வலு முறைமை என்பது எல்லா தொழிலாளர்களின் தொழில்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் ஒரு முறையாகும். இதற்காக போராடும் டெலிகொம் மனித வலு தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு சிவில் அமைப்புக்கள் ஒன்று கூடி உள்ளன. இந்தப் போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கொழும்பு பல்கலைக்கழக சமூகம் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தயாராக உள்ளோம்.

தொழில் வழங்குனர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் நேரடி தொடர்பு இல்லை. இதில் மனிதவலு அமைப்பு தொழிலாளர்களின் உழைப்பினை சுரண்டுகின்றார்கள்.

**மனிதவலு முறைமை ஏன் இலாபம்?**

ஒரு நிறுவனத்தில் மனிதவலு அமைப்பினரால் வழங்கப்பட்ட தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ளும் ஊதியம், சலுகைகள், விசேட கொடுப்பனவுகள், விடுமுறைகள் மற்றும் விசேட விடுமுறைகள் அந்த நிறுவனத்தில் நிரந்தரமாகப் பணியாற்றும் தொழிலாளர்கள் பெற்றுக் கொள்வதில் மூன்

நவீன அடிமைத்துவம் என்று கூற முடியும்.



மனித வலு சேவை என்பது அடிமையான தொழில். மனித வலு அமைப்பில் இருந்து நிறுவனங்களுக்கு வெவ்வேறு தொழில்களுக்கு தொழிலாளர்களை அனுப்பி வைக்கிறார்

றில் ஒரு பங்கு ஆகும். இந்த தொழிலாளர்களுக்கும் நிறுவனத்திற்கும் நேரடித் தொடர்பு இல்லாத காரணத்தினால் நிறுவனங்கள் தாம் விரும்பியபடி அந்தத் தொழிலாளர்களை எந்நேரமும் தொழிலில் இருந்து

**டெலிகொம் மனிதவலு தொழிலாளர்களின் போராட்டம்**

டெலிகொம் மனிதவலு தொழிலாளர்களின் போராட்டம் என்பது,

தொழிலாளர்களை இணைத்துக் கொள்கிறார்கள். டெலிகொம் நிறுவனத்தில் பணியாற்றும் 6000 தொழிலாளர்களில் 2200 தொழிலாளர்கள் மனிதவலு தொழிலாளர். முன்னர் ச

செலவுத் திட்டத்தில் மனிதவலு தொழிலாளர்களை நிரந்தர தொழிலாளர்களாக உள்வாங்கப்படுவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அரசாங்கம் இதுவரைக்கும் தொழிலாளர்களுக்கு தீர்வினை வழங்குவதற்கு எந்த வொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கள். அவ்வாறு தொழில் வழங்கும் நிறுவனங்கள் மனித வலு அமைப்பில் இருந்து தொழிலாளிகளை பெற்றுக் கொண்ட மனித வலு அமைப்பிடமே அவர்களுக்கான கொடுப்பனவுகளையும் கொடுக்கின்றார்கள். அந்தத் தொழிலாளர்கள் தமது ஊதியத்தினை தாம் தொழில் செய்யும் நிறுவனத்திடம் இருந்து பெறாது மனிதவலு அமைப்பிடம் இருந்தே தமக்கான ஊதியத்தினை பெற்றுக் கொள்கின்றார்கள்.

இடை நிறுத்த முடியும். நிரந்தர தொழிலாளர்களுக்கு இருக்கும் தொழிலாளர்களின் உரிமை தொடர்பில் கவனத்தில் எடுக்காது நிறுவனங்களின் தலைமைகள் செயற்பட முடியும். நிரந்தர தொழிலாளர்களுக்கும் மனித வலு தொழிலாளர்களுக்கும் வேறுபாடான சலுகைகள் வழங்குவதின் மூலம் தொழிலாளர் உரிமைகள் மீறப்பட்ட, பாதுகாப்பு அற்ற தொழில் முறைமைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பது

இலங்கையில் வேகமாகப் பரவுகின்ற மனித வலு தொழிலாளர் அடிமை முறைமைக்கு எதிராக உருவான போராட்டம். மனித வலு தொழிலாளர்களை இரண்டு வருடங்களுக்கு முன்னர் இணைத்துக் கொண்டது. டெலிகொம் நிறுவனம் உருவாகிய (SLT Manpower Solution) மூலம் டெலிகொம் நிறுவனத்திற்கு



ாரதிகள் போன்ற சாதாரண தொழிலாளர்களுக்காகவே தொழிலாளர்களை இணைத்துக் கொண்டார்கள். தற்பொழுது தொழில்நுட்ப பிரிவு போன்ற உயர் உத்தியோகத்திற்கும் மனிதவலு முறைமை அடிப்படையில் உத்தியோகத்தரை இணைத்துக் கொள்கிறார்கள். டெலிகொமில் பணியாற்றும் Manpower தொழிலார்கள் கடந்த பல வருடங்களாக தம்மை நிரந்தர தொழிலாளர்களாக உள்வாங்குமாறு கோரி போராட்டம் நடத்தி வருகின்றார்கள். அரச தரப்பில் இருந்து எந்தப் பதிலும் உறுதியாக கிடைக்காத நிலையில் தற்போது டெலிகொம் நிறுவனம் முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

**அரசு தரப்பிலிருந்து உரிய நடவடிக்கை எடுக்காததது ஏன்?**

இந்த தொழிலாளர்களுக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று வழங்குவதாகக் கோரி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு இன்னும் தீர்வினை வழங்கவில்லை. தொழிலாளர்களின் உழைப்பினைச் சுரண்டும் இந்த முறைமை முதலீட்டாளர்களைக் கவரும் பொருளாதார முறைமை. 2015 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட வரவு

**மனித வலு தொழிலாளர்களின் போராட்டத்திற்கு நாங்கள் ஏன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்?**

இந்தத் தொழிலாளர்கள் தற்போது தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளமையால் அவர்களுக்கு ஒரு உந்து சக்தியாக நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவர்களது போராட்டம் வெற்றி பெறுவதற்கு ஒத்துழைக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். இந்தப் போராட்டம் அவர்களது போராட்டமாக மாத்திரம் தொடராது. இந்தப் போராட்டம் வெற்றி அடைகிறதா? என்பதனை பொறுத்து தான் நாளை பட்டம் பெற்று, ஆயிரம் கனவுகளைச் சுமந்து கொண்டு தொழிலுக்குச் செல்லும் நீங்கள் Man Power நிறுவனத்தில் அடிமையாகி தொழில் செய்யும் நிலைமை ஏற்படுமா? இல்லையா? என்பது இந்தப் போராட்டத்தின் மூலமே தீர்மானிக்கப்படும். இதனால் பல்கலைக்கழக சமூகம் எனும் அடிப்படையில் இப்போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவது ஒவ்வொரு குடிமகனினதும் கடமையாகும். ஊடகங்களின் ஆதரவு கிடைக்காமல் தனித்துவிடப்பட்ட இந்த போராட்டத்திற்கு முடிந்தளவு ஆதரவினை வழங்க வேண்டும். மனித உரிமைகளையும், மனித நேயத்தையும் மதிக்கும் நாட்டில் இருக்கும் இந்த அடிமை முறைமையை இல்லாதொழிப்போம்.

டெலிகொம் மனிதவலு தொழிலாளர்களின் போராட்டம் தனிமைப்படுத்தப் படாமல் ஆதரவினை வழங்குவோம்.

# இந்த அரசின் கீழ் முஸ்லிம்களுக்கு எதிராக 64 வன்செயல்கள்

**செய்தியாளர் மாநாட்டில் ஏ.எச்.எம். அஸ்வர்**

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

இன்று இந்த நாட்டில் இனவாதம் சரித்திரத்தில் இல்லாதவாறு மிகவும் மோசமான முறையில் பரவி இருக்கின்றது. கொழும்பிலிருந்து நொச்சியாகமை வரை சென்ற மஞ்சள் காவி அணிந்த பிக்குமார்கள் இன்று முஸ்லிம்களுக்கு பலவாறும் அச்சுறுத்தலை விடுத்திருக்கின்றார்கள். இப்படியாக கிராம மட்டத்தில் எத்தனையோ இடங்களில் இந்த முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை சமுதாயம் மிகவும் விசமத்துடன் கண்டிக்கின்றது. எனவே, அரசாங்கம் இதனை உடன் நிறுத்த வேண்டும். முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றுத்தான் அரசுக்கு வந்தோம் என்று சொல்லுகின்றவர்கள் இப்படியான கிராமம் கிராமமாகச் சென்று முஸ்லிம்களுடைய இருப்பிடங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும். அதற்கு சாக்குப் போக்குகள் கூறுவதன் மூலம் சமுதாயத்தை திருப்திப்படுத்த முடியாது.

நேற்றுக் காலை கொழும்பு கொட்டா வீதி டாக்டர் என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் இடம்பெற்ற கூட்டுஎதிர்க் கட்சி ஊடக சந்திப்பின் போது முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் சார்பில் பங்கு கொண்ட அமைப்பின் செயலதிபர் ஏ.எச்.எம். அஸ்வர் மேற்கண்டவாறு கூறினார்.

இவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

அளுத்கமயை ஒரு சாட்டாக வைத்து முஸ்லிம்கள் மத்தியில் பொய்ப்பிரசாரங்கள் செய்து முஸ்லிம்களைத் திசை திருப்பி வாக்குகளைப் பெற்ற அரசாங்கம் இந்த அரசாங்கம். ஆனால், அது சில பல தவறுகள் நடைபெற்றதே தவிர, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக அதில் பங்கு கொள்ளவில்லை என்பதை தெளிவாக பல இடங்களிலும் மக்களுக்கு விளக்கிச் சொல்லி இருக்கின்றார். இதற்கிடையில் இருப்பிடங்களை இழந்து வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றவர்களுக்குரிய நஷ்டஈடு நாட்டின் பல இடங்களுக்கும் வழங்கப்படுகின்றது. இந்த நஷ்டஈடு அளுக்கமை முஸ்லிம்களுக்கு ஏன் இன்னும் வழங்குவதற்கு தாமதிக்கின்றனர் என்ற கேள்வியை நாம் கேட்கின்றோம்.



உடைந்த வீடுகளை, கட்டடங்களை, பள்ளிவாசல்களை, வியாபாரஸ்தாபனங்களை, அப்பொழுதே மீள்நிர்மாணம் செய்து கொடுத்ததை முஸ்லிம்கள் நன்கறிவார்கள். அப்படி இருக்கையில், ஒரு ஆடை விற்பனை நிலையத்தை இந்த அரசாங்கத்தின் கீழ்தான் தாக்கி இருக்கின்றார்கள். இதுமாதிரி பல இடங்களில், அதாவது 64 இடங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான விடயங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. எனவே நேற்றுமுந்தினம் பாராளுமன்றத்தில் கூட பொறுப்பு வாய்ந்த ராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அளுத்கம முஸ்லிம்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அது கட்டாயமாக வழங்கப்பட வேண்டும் என்று முஸ்லிம்கள் சார்பாக நாமும் கேட்டுக் கொள்ள விரும்புகின்றோம் - என்றும் தெரிவித்துள்ளார்.

# சாய்ந்தமருதில் மின்பாவனையாளர் சேவை நிலையம் அமைக்குக

**ஆரிப் சம்சுதீன் பிரேரணை**

(கல்முனையூர் அப்றாஸ்)

சாய்ந்தமருதில் மின்சாரப் பாவனையாளர் நிலையம் ஒன்றை அமைக்கக் கோரி கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்ற கிழக்கு மாகாண சபை அமர்வின்போது பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

அப்பிரேரணையில் குறிப்பிட்டிருப்பதாவது, மின்சாரப் பாவனையாளர்களுக்கு சேவை நிலையங்களினை அமைக்கக் கோரல்

சாய்ந்தமருதில் கிட்டத்தட்ட 8000 மின்சார பாவனையாளர் குடும்பங்களும் இறக்காமம் பிரதேசத்தில் கிட்டத்தட்ட 5000 மின்சார பாவனையாளர் குடும்பங்களும் காணப்படுகின்றனர். இம் மின் பாவனையாளர்களுக்கு சேவைகளை திறம்பட வழங்குவதற்காக சேவை நிலையங்களினை விஸ்தரிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எனவே சாய்ந்தமருதில் பாவனையாளர் சேவை நிலையம் ஒன்றினையும் இறக்காமம் வரிப்பதன் சேனையில் உப பாவனையாளர் சேவை நிலையம் ஒன்றினையும் அமைக்கக் கோருவதற்காக இப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

இப்பிரேரனைக்கு சபையின் முழு ஆதரவும் கிடைக்கப்பெற்றதோடு, மிக விரைவில் இதற்கான நடவடிக்கை எடுக்கக் கோரி மாகாணசபை தவிசாளர் கலப்பதியால் மத்தியரசாங்கத்தின் மின்வலுசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு பத்திரம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அமெரிக்காவை பின்பற்றும் பிரித்தானியா

# சவூதி - துருக்கி உள்ளிட்ட 6 நாடுகளிலிருந்து மின்னணு சாதனங்கள் எடுத்து வர தடை

6 நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பிரித்தானியாவுக்கு வரும் போது விமானத்தில் லெப்டொப், டேப்லெட் உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்கள் எடுத்து வர தடை விதித்து பிரித்தானிய அரசு உத்தரவிட்டுள்ளது.

எகிப்து, கட்டார் உள்ளிட்ட 8 நாடுகளிலிருந்து லெப்டொப், கெமரா மற்றும் ஐ-பேடுகளை விமானத்தில் எடுத்து வருவதற்கு அமெரிக்க அரசு நேற்றுமுன்தினம் தடை விதித்திருந்தது. மொபைல்கள், மருத்துவ உபகரணங்கள் போன்ற பொருட்களுக்கு இந்த தடையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

வளைகுடா நாடுகளான எகிப்து, ஜோர்தான், குவைத், மொராக்கோ, கட்டார், சவூதி அரேபியா, துருக்கி மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளிலிருந்து மேற்சொன்ன பொருட்களை எடுத்து வரக் கூடாது என தெரிவிக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவின் இந்த முடிவுக்கு துருக்கி அரசு கடுமையான எதிர்ப்பு தெரிவித்துள்ளதோடு, இந்த உத்தரவை திரும்ப பெற வேண்டும் என கூறியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்கா அரசு அறிவித்துள்ள இதே திட்டத்தை பிரித்தானிய அரசும் அமுல்படுத்தியுள்ளது.



துருக்கி, லெபனான், ஜோர்தான், எகிப்து, துனிசியா, சவூதி அரேபியா ஆகிய 6 நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பிரிட்டனுக்கு வரும் போது விமானங்களில் லெப்டொப், டேப்லெட், ஐ-பேடு போன்ற இலத்திரனியல் சாதனங்களை எடுத்து வர பிரித்தானிய அரசு தடை விதித்துள்ளது.

லெப்டொப் உள்ளிட்ட இலத்திரனியல் பொருட்களின் உள்ளே வெடிக்கும் விதமான வெடிபொருட்கள் ஏதேனும் பதுக்கிவைத்து கொண்டு வரலாம் என கருதுவதால் இந்த முடிவை பிரித்தானிய அரசு எடுத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகச் செய்திகள்

# 2033இற்குள் செவ்வாயிற்கு மனிதர்களை அனுப்ப திட்டம்

நாசா மசோதாவில் டிரம்ப் கைச்சாத்து



நாசா சார்பில் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்பும் மசோதாவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

அதன் படி 2033 ஆம் ஆண்டு வாக்கில் மனிதர்களை செவ்வாய் கிரகத்திற்கு அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 19.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவிடப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய மசோதாவின் கீழ் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்பவதோடு மட்டுமின்றி விண்வெளி ஆய்வுகள், ஓரியன் விண்கலத்திற்கான பணிகள் உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இதுதவிர விண்வெளியில் மனிதர்களை அனுப்புவது குறித்து விரிவான ஆய்வுகள் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2030இற்குள் செவ்வாய் கிரகத்தின் அருகில் அல்லது அதன் மேற்பரப்பில் மனிதர்கள் செல்ல ஏதுவான நீண்ட கால திட்டத்தினை வகுக்கவும், அதற்கான விண்கலத்தை உருவாக்கவும் நாசாவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்புவது குறித்து ஏற்கனவே அமெரிக்க அரசு பணிகளை செய்து வருகிறது.

பட்டினியில் சோமாலியா:

# ஒரேநாளில் 26 பேர் பலி: 62 இலட்சம் பேர் பரிதவிப்பு



சோமாலியாவில் வறுமையும், வறட்சியும் இணைந்து கோரத்தாண்டவம் ஆடி வருகின்றன. அங்குள்ள ஜூப்பாலேண்ட் பகுதியில் ஒரேநாளில் 26 பேர் பட்டினியால் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டின் அரச வானொலி தனது இணையதளத்தில் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவில் பொருளாதாரம் சீர்குலைந்து போயுள்ளது. இந்நிலையில் 62 இலட்சம் மக்கள் பட்டினியால் பரிதவிப்பதாகவும், அவர்களுக்கு உடனடியாக உணவுப்பொருட்கள் தேவைப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது. கடுமையான வறட்சியாலும், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாலும், கால்நடைகள் செத்து வருவதாலும், மக்கள் பெரும்பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகவும் ஜூப்பாலேண்ட் பிராந்திய துணை அமைச்சர் முஹம்மது உசேன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அந்நாட்டில் ஆறுகள் அனைத்தும் வறண்டு போய்விட்டன. கிணறுகளும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரிய அமைதிப் பேச்சுக்கு அனைத்து தரப்பும் சம்மதம்

ஐ.நா. தகவல்

சிரியாவில் இடம்பெறும் உள்நாட்டு போர் குறித்து அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க அனைத்து தரப்பும் சம்மதம் தெரிவித்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செய்தித் தொடர்பாளர் நேற்று (செவ்வாய்க்கிழமை) தெரிவிக்கையில்:-

''சிரியாவில் இடம்பெறும் உள்நாட்டு போர் தொடர்பாக ஐ.நா. தரப்பில் இருபுறத்திலும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வந்தது. இது தொடர்பாக சவூதி அரேபியா, துருக்கி, மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இதனையடுத்து சிரிய அரசு மற்றும் கிளர்ச்சிப் படைகள் ஜெனிவாவில் இந்த வாரம் நடைபெறவுள்ள அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க சம்மதம் தெரிவித்துள்ளன'' என்றார்.

முன்னதாக சிரிய தலைநகர் டமாஸ்கஸ் நகரில் அரசு மற்றும் கிளர்ச்சிப்படைகளுக்கு இடையில் கடந்த 10 நாட்களாக கடும் மோதல் நடந்து வருகிறது.

கிளர்ச்சியாளர்கள் பகுதியில் வான்வழித் தாக்குதலை நடத்த சிரிய ஜனாதிபதி பஷார் அல் அஸாத் உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து ஏராளமான பொதுமக்கள் அரசு பகுதிக்கு இடம்பெயர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சொத்துக்குவிப்பு வழக்கு தீர்ப்பில்

# ஜெயலலிதாவை குற்றவாளியென அறிவிக்கக்கோரி கர்நாடகா மனு



ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் மீதான சொத்து குவிப்பு வழக்கில் மறு சீராய்வு செய்ய கர்நாடகா மனு தாக்கல் செய்துள்ளது.

சொத்து குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு விதிக்கப்பட்ட ரூ.100 கோடி அபராதத்தை எப்படி வசூலிப்பது என்று விளக்கம் கேட்டு உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு மனு தாக்கல் செய்துள்ளது. நீதிபதி குன்ஹாவின் தீர்ப்பை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

மரணம் அடைந்தவர்களுக்கு தண்டனையை ரத்து செய்யலாம் என்றும் அபராதத்தை மட்டும் வசூலிக்க வேண்டும் என்றும் கர்நாடக அரசு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தெரிவித்துள்ளது. மேலும் அபராதத்தை வசூலிக்கும் வகையில் உச்ச நீதிமன்ற தீர்ப்பை மீளாய்வு செய்யவும் மனுவில் கூறியுள்ளது. முன்னதாக இந்த வழக்கை விசாரித்த நீதிபதி குன்ஹா ஜெயலலிதாவிற்கு ரூ.100 கோடி அபராதம் விதித்தது குறிப்பிடத்தக்கது.

சொத்துக்குவிப்பு வழக்கு தீர்ப்பில் ஜெயலலிதாவை குற்றவாளி என அறிவிக்கக் கோரி கர்நாடகா உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. பெப்ரவரி 14ஆம் திகதி அளித்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யக் கோரி கர்நாடக அரசு மனு தாக்கல் செய்துள்ளது. சொத்துக் குவிப்பு வழக்கில் விசாரணை முடிந்து தீர்ப்பு மட்டும் தான் ஒத்திவைக்கப்பட்டிருந்தது என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

# சிரிய பாடசாலை மீது அமெ. ஆதரவு படை குண்டு வீச்சு

33 பேர் பரிதாபப் பலி

சிரியாவின் அல்-மன்சோரா நகரிலுள்ள பாடசாலை மீது அமெரிக்காவின் ஆதரவு பெற்ற விமானப் படை நடத்திய தாக்குதலில் 33 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி வைத்திருக்கும் ஐ.எஸ். தீவிரவதிகளை அங்கிருந்து விரட்டுவதற்காக அமெரிக்காவின் ஆதரவுடன் அந்நாட்டு முப்படைகளும் ஆவேச தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், அந்நாட்டின் தென் பகுதியான ரக்கா மாகாணத்தின் அல்-மன்சோரா நகரிலுள்ள ஒரு பாடசாலைக் கட்டிடத்தின்மீது அமெரிக்காவின் ஆதரவு பெற்ற விமானப் படை நேற்று நடத்திய தாக்குதலில் 33 பேர் பலியானதாக தெரிய வந்துள்ளது.

பலியானவர்கள் அனைவரும் உள்நாட்டுப் போருக்கு பயந்து அலெப்போ மற்றும் ரக்காவின் பிறபகுதிகளில் இருந்து அடைக்கலம் தேடிவந்து, இந்த பாடசாலையில் தங்கி இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாலைவனத்தில் ஒரு சோலைவனம்



உலகில் பல்வேறு இடங்களில் நீர் நிலைகள், மரங்கள் அழிக்கப்பட்டு வரும் நிலையில் டுபாயில் பாலைவனத்தின் நடுவே பறவைகள் வசிக்கும் வகையில் மிகப்பெரிய செயற்கை ஏரி உருவாக்கப்பட்டுள்ளது.

டுபாய் அல்குத்ரா பகுதியில் பாலைவனம் சூழ்ந்த இடத்தின் நடுவில் சோலையாக 10 ஹெக்டருக்கும் அதிகமான இடத்தில் அழகிய செயற்கை ஏரி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இங்கு ஆயிரக்கணக்கான அரிய பறவைகள் வசிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பறவைகளுக்கு இப்பகுதியின் மனிதர்களால் எவ்வித இடையூறும் ஏற்படாத அளவில் சிறப்பாக இந்த ஏரி அமையபெற்றுள்ளது. வெளிநாடுகளிலிருந்து 130இற்கும் மேற்பட்ட பறவை இனங்கள் இங்கு ஆயிரக்கணக்கில் வந்து செல்கின்றன. இயற்கை வளர்ச்சிக்கு டுபாயில் முக்கியத்துவம் கொடுத்து வருவதால் துபாயில் மழை பெய்யும் சராசரி அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு மாதமாக மூடப்பட்டிருந்த பாக். - ஆப்கான் எல்லை திறப்பு




தீவிரவாத தாக்குதல் காரணமாக சுமார் ஒரு மாதத்துக்கும் மேலாக மூடப்பட்டிருந்த பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையேயான எல்லை மீண்டும் திறக்கப்பட்டது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடந்த மாதம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 70 பேர் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் பகுதியிலிருந்து வரும் தீவிரவாதிகள்தான் காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டது. இதையடுத்து, கடந்த பெப்ரவரி மாதம் இரண்டு நாடுகளின் எல்லைப் பகுதிகளும் மூடப்பட்டன.

இந்நிலையில், பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளைத் திறக்க பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் உத்தரவிட்டார். இதையடுத்து நேற்றுமுன்தினம் இரு நாட்டு எல்லைகளும் திறக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, நீண்ட நாட்கள் முடங்கியிருந்த சரக்குப் போக்குவரத்து மீண்டும் தொடங்கியது. பாகிஸ்தானிலிருந்து நூற்றுக்கணக்கான லொரிகள் எல்லையைக் கடந்து ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்தன.

தெற்கு ஆசியாவில் பரபரப்பாக வர்த்தகம் நடைபெறும் பகுதியான இருநாடுகளின் எல்லைகள் திறக்கப்பட்டது பொதுமக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வடகொரியாவின் புதிய ஏவுகணை சோதனை தோல்வி

வட கொரியா மீண்டும் புதிய ஏவுகணையை வீசி சோதனை நடத்தியது. ஆனால், இச்சோதனை தோல்வியடைந்ததாக தென் கொரியா இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடகொரியா எத்தகைய ஏவுகணைகளையும், அணு ஆயுதங்களையும் சோதனை நடத்தக்கூடாது என ஐ.நா.சபை தடை விதித்திருந்தோடு, எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

அதை கண்டு கொள்ளாத வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகள் நடத்தி வருகிறது.

இம்மாத தொடக்கத்தில் 4 ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியது. அவை 1000 கி.மீ. (620 மைல்) தூரம் பாய்ந்து சென்று தாக்க கூடியது. அவை ஜப்பான் கடல்பகுதியில் வீழ்ந்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில் வட கொரியா மீண்டும் புதிய ஏவுகணையை ஏவி சோதனை நடத்தியது. இச்சோதனை வடகொரியாவின் வன்சான் நகர கடல் பகுதியில் நடத்தப்பட்டது.

ஆனால், எத்தனை ஏவுகணைகள் வீசி சோதனை நடத்தப்பட்டது என தெரியவில்லை. அவை எத்தகைய ரகம் என்றும் தகவல் வெளியாகவில்லை.

ஆனால் இச்சோதனை தோல்வியடைந்ததாக தென் கொரியா இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதை அமெரிக்க இராணுவமும் உறுதி செய்துள்ளது.

விண்ணில் ஏவுகணை செலுத்தப்பட்ட சில வினாடிகளில் அது வெடித்து சிதறி விட்டது என தெரிவித்துள்ளது.

## வழக்குகளை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாரியாருக்கு எதிரான விசாரணைகள் முடிவடைந்துள்ளபோதிலும் அவருக்கு எதிராக ஏன் இன்னும் வழக்குத்தொடுக்கப்படவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றில் நேற்றைய தினம் நடைபெற்ற இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் இலஞ்சம் தொடர்பான திடீர் சோதனைகளின் முற்பணக் கணக்கின் வரையறைகளில் திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

ஊழல்,மோசடிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதியளித்தே இந்த அரசு ஆட்சி பீடமேறியது. ஆனால், இன்று என்ன நடக்கின்றது? மோசடிக்காரர்கள் பாதுகாக்கப்பட்டுவருகின்றனர்.

இந்த இலஞ்ச, ஊழல் விசாரணைக்குழுவானது முக்கிய பிரமுகர்களுக்கு எதிராக உரிய வகையில் விசாரணை நடத்தாது என்பது 1994 ஆம் ஆண்டுமுதல் எழுதப்படாத சட்டமாகவே இருந்துவருகின்றது.

இவ்வாறான சூறா மீன்களை எல்லாம் விட்டு விட்டு சிறிய நெத்திலி மீன்களான சாதாரண அரச அதிகாரிகளே இந்த ஆணைக்குழுவால் குறிவைக்கப்படுகிறார்கள்.

ஆனால் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளராக டில்ருக்சி டயஸ் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் நிலைமைமாறத் தொடங்கியது. முன்னாள் அமைச்சர்கள் நால்வருக்கு எதிரான முறைப்பாடுகளை விசாரணைசெய்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். முன்னாள் எம்.பியொருவரையும் விசாரணை வலைக்குள் விழச்செய்தார். இவர் எம்.பியாக இருந்தபோதிலும் பலம்மிக்க வெளிவிவகார அமைச்சர் ஒருவரைப்போலவே செயற்பட்டார்.

இத்துடன் நின்றுவிடாது, முன்னாள் பாதுகாப்புச்செயலாளர், கடற்படைத்தளபதிகள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்தும் தற்போதைய அரசிலுள்ள இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு எதிராகவும் டில்ருக்சி டயஸ் விசாரணைகளை ஆரம்பித்தார். இப்படியிருக்கும்போதே அவரின் பதவி விலகல் இடம்பெற்றது. அவர் ஏன் பதவி விலகினார் என்பதற்குரிய காரணத்தை பிரதமர் சபைக்கு இன்னும் அறிவிக்கவே இல்லை. சூறாமீன்களுக்கும் வலைவிரித்த காரணமாகவே அவர் தற்போது உதைபந்தைப் போல் விரட்டப்பட்டுள்ளார்.

அதன்பின்னர் புதிதாக ஒருவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். ஐந்துமாதங்கள் கடந்துள்ளபோதிலும் ஒரு வழக்கு மாத்திரமே போடப்பட்டுள்ளது. எனவே, அந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகள் அரசியல் நோக்கங்களுக்காக முடக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகியுள்ளது.

அதேவேளை, முக்கிய கொலைகள் தொடர்பில் சி.ஐ.டி.யினர் விசாரணை நடத்திவந்தாலும் ஊடகவியலாளர் லசந்த, றக்பி வீரர் தாஜுதீன் ஆகியோர் உட்பட சர்ச்சைக்குரிய படுகொலை சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை கண்டுபிடிப்பது அரசின் உண்மை நோக்கம் அல்ல. மாறாக கொலையாளிகளுக்காக அவை மூடிமறைக்கப்படவுள்ளன என்றார்.

## இலங்கை முஸ்லிம்களின்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சில அமைப்புகளும் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. அவற்றுள் சில எழுத்தாளர்கள் வெளியிட்டவைகளும் அடங்கும் அவற்றின் விபரம் வருமாறு:

1970இல் 'அல்இல்ம்' 'இக்ராஹ்' 'கடமை' (அறிவுக்கரசன்) 'அல் அரப்', 1970இல் 'அல்ஹஸனாத்' (ஜமாஅத்தே இஸ்லாமி) 'சிராஜ்' 1972 'புயல்' (ஹமீத்), 1973இல் ஊசி, 'கவிதை', 'அம்பு', 'கல்பனா' (தெமடகொட வை.எம்.எம்.ஏ.) 1975 இல் 'இஷாஅதுல் இஸ்லாம்' 'கலைக்கடல்' (கலைவாதி கலீல்) 'நேர்வழி', 'வான்சுடர்', 'அபியுக்தன்' (எச்.எம்.பி. முஹிதீன்) 'எரிமலை' (நிஹ்மத்), 'முத்து', 'ஸாஹிரா' 1977 இல் 'ஜும்ஆ' (பலப்பிட்டி அரூஸ்), 'முஸ்லிம்' 'சமத்துவம்' 'அஷ்ஷபாப்' (எம்.எச்.எம்.சம்ஸ்), 'ஷிக்வா' 1978 இல் 'வெண்ணிலா' 'மில்லத்', 'வான் வீதியிலே' 1979இல் 'உதயம்' (முஸ்லிம் லீக் வாலிப முன்னணி) 'இஸ்லாமிய சிந்தனை' (நளீமிய்யா கலாபீடம்) என்பனவாகும். அம்மட்டோ? இன்னும் உண்டு.

1980இல் 'அல்ஹக்கீகா' 'ஹிஜ்ரா', 'புதுமைக் குரல்', 'பூபாளம்' (அல் அருமத்), 1981இல் 'முஸ்லிம் காங்கிரஸ்' 'ஞானச் சுரங்கம்'(அப்துர் ரவுப் மௌலவி) 'பூகம்பம்' (முஸம்மில் - சாதிக்கீன்) 1982இல் 'முஸ்லிம் செய்தி', 1983இல் 'தூது' 'முஸ்லிம் நோக்கு' 1984இல் 'சுஊனுல்' இஸ்லாம் (மௌலவி புர்ஹானுத்தீன்) 'பாசம்', 'தடாகம்' 'அல் ஹுதா' 1985இல் 'ப்ரிய நிலா' உயன்வத்தை (ரம்ஜான்) 1986இல் 'கலைச்சுடர்' அல்ஜஸீரா (முபாரக் மௌலவி), 'போர் முரசு' 'மருதாணி' 'முக்கனி' 'எழுச்சிக்குரல்' 1987இல் 'பாமிஸ்' (பாமிஸ் இயக்கம்) 1988இல்; 'பிறைக்கவசம்' 'முனை' 'பாசமலர்' 1989இல் 'அல் பிக்ஹ்' என்பனவாகும். இன்னும்....

1985இல் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி 'ப்ரபோத' எனும் ஏட்டை சிங்கள மொழியில் வெளியிட்டது. 1991இல் 'வாசகன்' 'நேசன்' 'தியாகத் தென்றல்' 'இளங்கீற்று' 'அல்ஹுயு' 1992இல் 'மஜ்லிஸ்' 'அல் உஸ்ரா' 'முஸ்லிம் முன்னணி' 'முஸ்லிம் கட்சி' 'பார்வை' 'ஆகவே' 'சௌதுல் உலமா' (உலமா சபை) 1993 இல் 'புள்ளி' 'ஊர்க்குருவி' 1994இல் 'முன்னணி நேசன்' 'ஈஸ்டர்ன் வாய்ஸ்' 1995இல் 'வெளிச்சம்' என்பவையே! இவற்றுள் ஓரிரண்டு ஏடுகள் தவிர, மற்றவையாவும் சமுதாய பற்றுறுதி ஆர்வத்தில் ஆரம்பிக்கப்பட்டு, சில நாட்களில் கண்மூடியவையே!

இவற்றுடன் ஒரு நோக்கத்திற்காக, ஒரு தேவைக்காக குறிப்பிட்ட காலத்திற்கு என ஆரம்பிக்கப்பட்ட ஏடுகளும், வெளிவந்தன. அவை வருமாறு: 'சமாதானம்' அல் இஸ்லாம் 'அல் மிஸ்பாஹ்' 'நாளை நமதே' 'ஷைபுல் இஸ்லாம்' 'செய்தி மடல்' 'சத்திய தூதன்' 'முன்னோடி' 'ஹிக்மா' 'தினமதி' 'பூவிழி' என்பனவாம். எங்கள் தேசம், மீள்பார்வை, வைகறை, அகரம் சிறுவர் சஞ்சிகை என்பன இப்போதும் வந்து கொண்டிருக்கின்றன.

ஆக்கத்தின் இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டோம். தேங்கியும் - ஓங்கியும் நிற்கும் 'தனித்துவம்' என்ன தெரியுமா?

தட்டினால் சப்தம் வர வேண்டும். அதுபோல எந்தவொரு வியாபாரத்தை நடத்தினாலும், இலாபம் வர வேண்டும். இலங்கை முஸ்லிம்களால் நடத்தப்பட்ட பத்திரிகைகள் இலாபத்தை நோக்கமாகவோ அக்கறையாகவோ கொள்ளாமல், சம்பாதிக்கும் ஆசை துளியும் இல்லாமல், சமுதாய பிரக்ஞையுடன் அறிவு வளர்ச்சி சமயக் கருத்துக்களை பரப்புதல் - சமூகப் பிரச்சினைகளை தொட்டெழுதல் ஆகிய மூன்று குறிக்கோள்களையும் முன்நிறுத்தியே பத்திரிகைகளை ஆரம்பித்தனர், நடத்தினர்.

இலாபம் காணாமல் நடத்திய பாங்கு தனித்துவ சிறப்பல்லவா? அதனால் பின்னாட்களில் அவை யாவும் கண்மூடிய சோகம், 'நிதி திட்டமிடல்' பத்திரிகைத் துறையில் ஈடுபடும் புதியவர்களுக்கும் அவசியம் இருக்க வேண்டிய வியாபாரக் குணம் என்ற பாடத்தை - பட்டறிவைத் தொட்டுக்காட்டியதை விட்டுவிடாமல் பற்றிப் பிடிப்போமாக, இப்போது வெளிவரும் இருபதாண்டை தொட்ட 'நவமணி' யையும் - எட்டாண்டுகளை எட்டிப் பிடித்துள்ள 'விடிவெள்ளி' யையும் சமுதாயத்தின் இரு கண்களாக வாழ்த்துவோமாக, அல்ஹம்துலில்லாஹ்!

(நன்றி கூர்-மை-முனை)

## வாழைத்தோட்டம்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மீஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீன், பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கொழும்பு மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் கே. எம். முக்ஷித் அஹ்மத் அல் பாஸி விஷேட உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாக சபை இணை தலைவர் எச். எம். அம்ஜதீன், நிர்வாக இணைச் செயலாளர் ஏ. எச் கரீம் ஆசிரியரும் ஊர் பிரமுகர்கள் என்ற அடிப்படையில் ஏற்பாட்டுக் குழு சார்பில் கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனி, கலாபூஷணம் கே. எம். நஸீர் அஹமட் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன், உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பாராட்டப்பட பழைய மாணவர்களின் விபரங்கள் பின்வருமாறு :-

(1) தலைவர் - ஜனாப் கே. எம். எம். நாஸிர் (அதிபர்), (2) பொதுச் செயலாளர் - ஊடகவியலாளர் என். ஏ. எம். ஸாதிக் ஷிஹான், (3) பொருளாளர் - ஜனாப் எம். எஸ். எம். ஹஸன், (4) உப தலைவர் - அல்ஹாஜ் ஏ. எம். பௌசுல் அமீர், (5) உப தலைவர - அல்ஹாஜ் எச். எம். எச். ஹஸன் இஸ்மத், (6) உப செயலாளர் - அல்ஹாஜ் எஸ். எச். எம். அஷ்ரப், (7) உப பொருளாளர் - எம். எஸ். எம். புஹாத், (8) பொதுசன தொடர்பு அதிகாரி - திரு. அருன் பிரகாஷ், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான (9) ஜனாப் எம். எஸ். எம். இம்ரான், (10) ஜனாப் பி. ஏ. எம். மபாஸ், (11) ஜனாப் பசால் சிராஸ், (12) ஜனாப் மிஸ்ருல் ஆப்தீன், (13) ஜனாப் எஸ். எம். அஸ்வர், (14) ஜனாப் என். ஏ. எம். குலாம். (15) ஜனாப் எச். எப். எம். பர்ஹான். (16) ஜனாப் எச். எம். சுஜாப்தீன், (17) ஜனாப் எம். எப். எம். பாஸில் ஹஸன், (18) ஜனாப் எம். எப். எம். முனாஜி, (19) திருமதி பாத்திமா ரிஸ்வானா, (20) திருமதி மிப்ரா சலீம், (21) ஜனாப் எம். ஐ. எம். முபாரக், (22) ஜனாப் எம். எப். எம். அஜ்ரான், (23) ஜனாப் எஸ். எம். எம். அனஸ், (24) ஜனாப் எஸ். எப். எம். சபியுடீன், (25) எச். ஆர். எம். ரஷீட், (26) ஜனாப் அஸ்ரீன் ஹனிபா, (27) ஜனாப் ஷியாஉல் ஹஸன், (28) ஜனாப் சி. எம். எம். பைரூஸ், (29) திருமதி குவைலிதா நஸீர், (30) திருமதி ரிஸ்னா சிராஸ், (31) திருமதி ரம்ஜான் பீ பீ எஸ் சூடீன், (32) திருமதி என். எச். எப். ரீஸா, (33) திருமதி ஜனுல் மர்ளியா, (34) ஜனாப் ஏ. ஜே. எம். ரமலான், (35) அல்ஹாஜ் எம். எஸ். எம். ரிஸ்வான், (36) அல்ஹாஜ். எம். பி. எம். ரிஸ்வான், (37) ஜனாப் எம். எஸ். எம். ரொஷான் (38) ஜனாப் ஏ. எம். எம். ரிஸான் ஆகிய பழைய மாணவர்களே பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

படங்களும் தகவலும்
ஏ. எஸ். எம். ஜாவித்

## கொழும்பு பெண்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சட்டவிரோதமாக நடந்துகொள்ளும் மாணவர்களுக்கு எதிராகவும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டி பிரதேசத்திலுள்ள பிரதான பாடசாலை மாணவர் குழு கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றிய வேளையில், பொரளை யசோதா பெண்கள் பாடசாலையில் அத்துமீறி நுழைந்து அங்குள்ள காவலாளியை தாக்கியுள்ளதோடு, அங்குள்ள மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் பீதியுறும் வண்ணம் செயற்பட்டுள்ளதனாலேயே இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

## 52% பெண்களுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

குறைந்து வருவதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை பல்கலைக்கழக மகளிர் கூட்டமைப்பு ஜனநாயக தலைமைத்துவமொன்றிற்காக இளைஞர்களை வலுவூட்டல் என்ற தலைமையில் தேசிய ஆவண காப்பக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டிலுள்ள வாக்காளர்கள் எண்ணிக்கையிலேயே 52 வீதமானவர்களே பெண் வாக்காளர்கள் உள்ளபோதும், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்கள் 5 வீதமானேரே இருக்கின்றார்கள். அதே நேரம் உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் 3 வீதமாகவும், வாக்காளர் பட்டியலில் 1.9 வீதமான பெண்கள் பிரதிநித்துவம் பெறுகின்றனர். இது ஒரு பிரமிட்டை போன்று அல்லாமல் அதையும் விட குறைந்து செல்லும் நிலையிலேயே பெண்களின் பிரதிநிதித்துவம் இருக்கின்றது.

பொதுவாக ஆசிரியர் தொழிலை எடுத்துகொண்டோம் என்றால் 100 இற்கும் 80 வீதமான பெண்கள் ஆசிரியைகளாக இருக்கின்றனர். ஆனால், ஆசிரியர்களுக்கான தொழிற்சங்களில் தலைமைத்துவத்தை வகிக்கும் பதவிகளின் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது.

இதேபோன்று, வைத்தியர்கள் தொழிற்சங்கம், சட்டத்தரணிகளின் தொழிற்சங்கம் ஆகிய வெவ்வேறான தொழிற்சங்கங்களிலும் தலைமைத்துவத்தை பிரிதிபலிக்கும் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது.

இதற்கான காரணம் நமது பெண்களுக்கு எந்தவொரு தொழிலையும் செய்யமுடியும், ஆனால் அந்த தொழில் சார்ந்த தலைமைத்துவத்தை வகிக்க முடியாது என்ற கோட்பாடு எழுந்துள்ளமையே, பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் பெண்கள் மாத்திரமன்றி ஆண்களும் அக்கறையுடன் செயற்படுவதே சிறந்தது என தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சிமன்ற தேர்தலின் தாமதம் குறித்தும் இதன்போது, தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுப்படுத்தினார்.

## தமிழ் இளைஞர்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கும் இடையில் பெறும் வாதவிவாதம் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ரகசிய கொலை கும்பல் இருந்ததா இல்லையா என்பது குறித்தே மேற்படி விவாதம் எழுந்துள்ளது.

இருந்தது என்று நான் அறிவேன். என்னை விட அதனை யாரும் அறிந்திருக்க முடியாது. காரணம் கடந்த காலத்தில் கொழும்பில் தமிழர்கள் கடத்தப்பட்ட போதும் கொலை செய்யப்பட்ட போது அதற்கு எதிராக நாம் வீதியில் நின்று போராடினோம். அப்போது எனது இடது கையாக பாராளுமன்ற உறுப்பினர் நடராஜ் ரவிராஜும் வலது கையாக ஊடகவியலார் லசந்த விக்கிரமதுங்கவும் என்னுடன் இருந்தார்கள்.

மேற்படி இருவரையும் கொலை செய்துவிட்டார்கள். என்னையும் கொலை செய்ய முயற்சித்தார்கள் நான் தப்பிவிட்டேன். கடந்த காலத்தில் 550 மேற்பட்ட தமிழர்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டிருக்கின்றார்கள். பெருந்தொகையான தமிழ் வர்த்தகர்கள் கப்பம் கேட்டு கஷ்டப்படுத்தப்பட்டுள்ளார்கள். கொடுமைப்படுத்தப்பட்டார்கள்.

தேடிச் சென்று கப்பம் கேட்டார்கள் வகை தொகையின்றி கைது செய்யப்பட்டார்கள் பாரிய அட்டுழியங்கள் நடந்தன அநீதிகள் நாட்டில் இடம்பெற்றன அதனை கண்டித்து போரடியும் இருக்கின்றோம். அதனாலேயே தான் அந்த காலத்தில் ரகசிய கொலை கொம்பல்கள் இருந்தது என்பது சகலருக்தும் தெரிந்த விடயமாக இருந்தது.

அதனை இல்லையென்று கோத்தபாய ராஜபக்சவினால் கூற முடியாது. காரணம் அன்று பாதுகாப்பு செயலாளராக இருந்த இவரே மேற்படி விடயங்களுக்கு ஆணையிட்டார். அந்த அலங்கோலங்கள் தான் இன்றும் எமது நாடு ஜெனீவாவில் சென்று சீரழிகின்றது.

எனவே நாட்டில் மனித உரிமைகளை மீறும் வகையிலான தவறுகளை செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான சட்டம் போதவில்லை என்றார் சட்டத்தினை புதுப்பிப்போம். புதிய சட்டங்களை உருவாக்குவோம். அதனை விடுத்து சட்டத்தினை விட்டு வெளியில் சென்று தமிழர்களை கடத்திக் கொண்டு போய் கொலை செய்வதை அனுமதிக்க முடியாது.

ஆனால் இதுதான் கடந்த நாட்களில் நடந்தது. இலக்கத்தகடற்ற வண்டிகளில் வந்து சீருடை அணியாமல் வந்து தமிழர்களின் வீடுகளுக்குச் சென்று கதவுகளை தட்டி நாய்களைப் போல இழுத்துச் சென்றார்கள். அவ்வாறு இழுத்துச் செல்லப்பட்ட தமிழர்கள் தான் பல இடங்களில் வைத்து கொலை செய்யப்பட்டிருந்தார்கள்.



நேற்று சோவியத் ரஷ்யாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி தம்பதியினரை விமான நிலையத்தில் வைத்து வரவேற்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

## உண்ணாவிரதமிருக்கும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விமல்வீரவன்ஸவின் சட்டைப் பையில் லெமன்பப் பிஸ்கட் இருக்கின்றதா என்பது தொடர்பில் அதிகாரிகள் ஆராயவேண்டும் என்று ஆளும்தரப்பு பாராளுமன்ற உறுப்பினரான நலின் பண்டார நேற்று சபையில் கிண்டலாகத் தெரிவித்தார். அத்தோடு, உண்ணாவிரதமிருப்பதில் விமல் வீரவன்ஸ ஒரு பட்டதாரி என்றும் அவர் தெரிவித்தார்.

மஹிந்த அரசில் இடம்பெற்ற வாகன மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள தனக்கு தொடர்ச்சியாக பிணை மறுக்கப்படுகின்றமைக்கு எதிர்ப்பினை வெளியிடும் முகமாக விமல்வீரவன்ஸ எம்.பி. நேற்றைய தினம் சிறைச்சாலையில் இருந்தவாறே உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினார்.

இந்நிலையில், இதுவிடயம் தொடர்பில் நேற்றைய தினம் பாராளுமன்றில் இடம்பெற்ற சபைஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே நலின் எம்.பி. மேற்கண்டவாறு கிண்டலடித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், விமல் எம்.பி. தற்போது சிறையில் உண்ணாவிரதம் இருக்கிறார் என்று தெரிய வந்துள்ளது. அவர் எவ்வாறான உண்ணாவிரதத்தை மேற்கொள்வார் என்று தும்முல்லையில் செய்த உண்ணாவிரதமே சிறந்த ஒரு உதாரணமாகும். உண்ணாவிரதம் என்றுக் கூறி சட்டைப் பையில் லெமன்பப் பிஸ்கட்டைத் தான் அவர் அப்போது சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

தற்போது சிறையிலும் அவரின் சட்டைப் பையில் அந்த பிஸ்கட் இருக்கின்றதா என அதிகாரிகள் ஆராயவேண்டும். பாராளுமன்றுக்கு; வந்தாலும் காலையில் பிதுருதாலகால மாலை போல காலை சாப்பாட்டையும் பின்னர் சமனல மலை போல மதிய உணவையும் மாலையில் நக்கல்ஸ் மலை போல இரவு உணவையும் தான் விமல்; உண்பார்.

இப்படியானவர் தான் தற்போது உண்ணாவிரதமிருக்கிறாராம். மேலும், தமது தலைவரே உண்ணாவிரதமிருக்கும்போது தேசிய சுதந்திர முன்னணியின் ஏனைய உறுப்பினர்களும் உண்ணாமல் தானே இருக்கவேண்டும்.

ஆனால், இவர்களோ பாராளுமன்றில் நன்றாக சாப்பிடுகிறார்கள். விமல் வீரவன்ஸ எவ்வாறான உண்ணாவிரதமிருப்பார் என்பது எமக்கு தெரியும். அவர் தான் இதில் பட்டதாரியாயிற்றே. என்றார்.

## பன்றிகளை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முன்னிலையில் நடைபெற்ற இவ்வழக்கு விசாரணையின்போது அரச புலனாய்வுப் பிரிவில் சேவையாற்றிய முன்னாள் பணிப்பாளரான மேர்ஜ ஜெனரல் கபிலவித்தாரணவினால் செயற்படுத்தப்பட்ட ஒரு குழுவே இப்படுகொலையை செய்தது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம்; அறிவித்தது.

அத்தோடு கூறிய ஆயுதத்தால் தலையில் தாக்கப்பட்டே இவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று அண்மையில் தோண்டியெடுக்கப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவின் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கையை சமர்ப்பித்தும் மேற்படித் திணைக்களமானது மன்றில் அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டது.

இந்நிலையில் அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியாலர் மாநாடு நேற்றைய தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற போது இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே இராடங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுவிவகாரம் குறித்து அவர் தெரிவித்ததாவது

லசந்த விக்கிரமதுங்க துப்பாக்கியால் சுடப்பட்டே படுகொலை செய்யப்பட்டார் என்று ஏற்கனவே மரண பரிசோதனை அறிக்கையூடாக தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது றிய ஆயுதத்தால் தாக்கப்பட்டே அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

லசந்த கொல்லப்பட்டப்போதே இவர் துப்பாக்கியால் சுடப்பட்டல்ல மாறாக பன்றிகளைக் கொல்லும் ஒரு வித்தியாசமான கூறிய ஆயுதத்தால் தாக்கப்பட்டே கொல்லப்பட்டுள்ளார் என்று நாம் றியிருந்தோம். ஆனால் இதுகுறித்து அப்போது கண்டுக்கொள்ளப்படவில்லை.

அதேநேரம் இவ்விடயத்தை பெரிதுப்படுத்த வேண்டாம் என்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுக்கும் இவர்களால் அப்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நாம் இவ்விடயத்தை அவ்வளவு எளிதில் விடமாட்டோம்.

லசந்தவின் படுகொலையில் வெளிவந்துள்ள இந்த இரண்டு மரண அறிக்கைகள் தொடர்பிலும் தீவிரமாக விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனைப் பெற்றுக் கொடுப்போம். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார்.

## விமல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தார். இதன்போது, நேற்று காலை வழங்கப்பட்ட காலை உணவையும் நிராகரித்துள்ளார். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமக்கு 73 நாட்களாகியும் பிணை வழங்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர் இந்த உண்ணாவிரதத்தை முன்னெடுத்துள்ளார். தமக்கு எதிராக அரசினாலும், அரசியல் கட்சிகளினாலும் பழிவாங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார். இதேவேளை, நேற்றுமுன்தினம் கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி விகும் கலு ஆராச்சி விமல் வீரவன்ஸவின் பிணை மனுவை நிராகரித்திருந்தார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தின் போது, அரச வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக சென்ற போது, நிதிக் குற்றப்புலனாய்வு பிரிவினரால் விமல் வீரவங்ச கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சராக இருந்த காலப் பகுதியில் ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 40 வாகனங்களை தவறாக பயன்படுத்தியதாக விமல் வீரவங்ச மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## கிண்ணியா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ராஜித சேனாரத்ன தன்னிடம் உறுதியளித்திருப்பதாக கைத்தொழில் வணிக அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கிண்ணியா பொதுநிர்வாக கட்டடத்தில் டெங்கு பாதிப்பும் அதற்கான முன்னேற்பாடுகள் பற்றியும் ஆராய்வதற்கு நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூபின் அழைப்பில் நேற்று கிண்ணியாவுக்கு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவுடன் விஜயம் செய்த அமைச்சர் அங்கு நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் எரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட்

கிராமிய பொருளாதார பிரதியமைச்சர் அமீர்அலி, பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர்அஹமட், ஹுஸைன் பைலா, டாக்டர்ஹில்மிமஹ்ரூப், மருத்துவஉயர்அதிகாரிகள், பொலிஸ், மற்றும் முப்படையினரும் கலந்து கொண்ட இந்தக் கூட்டம் அப்துல்லாஹ்மஹ்ரூபின் தலைமையில் இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள டெங்கு பாதிப்புக்களின் நிலவரங்களை ஆராய்வதற்காககடந்தவாரம் இங்கு விஜயம் செய்து நாம்பல் வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இந்த மக்களின் துயரங்கள் குறித்து ஜனாதிபதி, பிரதமருடனும் நான் நேற்றும் விஷேடமாக சந்தித்துநிலமைகளை எடுத்துக் கூறினேன்.

நாம் வாக்குறுதி அளித்தபடி 2 கண்டைனர்களை வழங்கியுள்ளோம். அத்துடன் எமதுஇன்னோரன்ன உதவிகள் இன்னும் தொடரும். அமைச்சர் பைஸர்முஸ்தபாவிடம்நாம் விடுத்தவேண்டுகோளை ஏற்று அவர் இங்கு வந்திருப்பது எமக்கு மகிழ்ச்சி தருகின்றது. அவருக்குஊர் மக்கள் சார்பில் எனது நன்றிகள். டெங்கு நுளம்பு ஒழிப்புப் பணிகளுக்காக அவர் பல்வேறு உதவிகளை மேற்கொள்ள முன்வந்துள்ளார். அத்துடன் கழிவகற்றல், குப்பைகூளங்களை வெளியேற்றல், துப்பரவுப்பணிகளுக்காக ட்ரக்டர், துப்பரவுப்பணியாளர்களுக்கான சம்பளம், புகைவிசிறும்கருவிகள், கழிஉறிஞ்சிகள், ஆகியவற்றையும் தறுவதாக வாக்குறுதியளித்துள்ளார். கிண்ணியாவைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை நாம்முன்னெடுத்துள்ளோம். எனினும் மாகாண அமைச்சின்கீழ் இந்த வைத்தியசாலை நிர்வாகம் அமைந்திருப்பதால் மாகாணசபை இதனை விடுவிக்க வேண்டும். இங்கிருக்கும் முதலமைச்சர் ஒத்துழைப்பை நல்கினால் எமது செயற்பாடுகள் இலகுவாக அமையும்.

இந்தக்கூட்டத்தில் முதலமைச்சர் ஹாபீஸ் நசீர்அஹமட்டும் உரையாற்றினார். இதில் பிரதேச மக்கள் வைத்தியசாலை அதிகாரிகள், பொதுச் சுகாதார அதிகாரிகள், பொலிஸ் இராணுவ அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இதன்போது கிண்ணியா உலமா சபையினர், கிண்ணியா மஜ்லிஷ் அஸ் - ஷூரா கிண்ணியா வைத்தியசாலை ஏ- தரத்திற்கு உயர்த்தப்பட வேண்டும் என மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

அதன் பின்னர் அமைச்சர்குழாத்தினார் கிண்ணியாவைத்தியசாலைக்கு விஜயம் செய்துடெங்கு நோயாளர்களைப்பார்வையிட்டதுடன் மாவட்டவைத்தியஅதிகாரி மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களிடம் தற்போதைய நிலவரங்கள் குறித்து கேட்டறிந்துகொண்டனர். இதன்பின்னர் அமைச்சர்கள் தோப்பூர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்துநோயாளிகளைப்பார்வையிட்டனர்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

## டெஸ்ட் தரப்படுத்தலில் மூன்றாமிடத்தில் ஹேரத்!

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் டெஸ்ட் பந்துவீச்சாளர் தரப்படுத்தலில் 4 ஆம் இடத்திலிருந்து 3 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.ஐ.சி.சி. வெளியிட்ட டெஸ்ட் தரப்படுத்தவில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை டெஸ்ட் பந்துவீச்சாளர்கள் தரப்படுத்தலில் முதலாம் இடத்தை இந்திய அணியின் ஜடேஜா பிடித்துள்ள நிலையில், இரண்டாம் இடத்தை இந்தியாவின் ரவிச்சந்திரன் அஸ்வின் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இதேவேளை, இலங்கை டெஸ்ட் அணியின் தலைவரான ரங்கன ஹேரத், பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான வக்கார் யூனுஸின் சாதனையை சமன் செய்துள்ளார்.

வங்கதேச அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின், இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணியின் ஹேரத் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் 373 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.இதே போன்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் வக்கார் யூனிஸ் 373 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்திருந்தார்.

## ஐ.சி.சி. தலைவர் பதவிக்கு திலங்க சுமதிபால போட்டி?



பீ.எப்.எம் நிஷாட்

இலங்கை கிரிக்கெட் சபையின் தற்போதைய தலைவர் திலங்க சுமதிபால சர்வதேச கிரிக்கட் சபையின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தற்போது திலங்க சுமதிபாலவுக்கு ஆதரவாக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே ஆகிய 4 நாடுகளும் முன்வந்துள்ளதுடன், தென்னாபிரிக்கா அல்லது மேற்கிந்திய தீவுகளின் ஆதரவினைப் பெற்றுக் கொண்டு குறித்த பதவியினை பெறுவதற்கான அதிக வாய்ப்புக்களும் அவருக்கு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஐ.சி.சியின் அங்கத்துவம் பெற்றுக் கொண்டுள்ள 10 நாடுகளின் பங்குபற்றலுடன் அடுத்தமுறை நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் திலங்க சுமதிபாலவுக்கு இப்பதவி வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச கிரிக்கட் சபையின் தலைவர் (ICC) ஷசாங் மனோகர் தன் பதவியிலிருந்து கடந்த வாரம் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.இதன்படி, அடுத்த தலைவரை நியமிக்கும் வரை தலைமைச் செயலதிகாரியே தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என சர்வதேச கிரிக்கெட் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே ஐ.சி.சியில் அங்கம் வகிக்கின்ற நாடுகளில் மூத்த அதிகாரியாககவும், அனுபவமிக்க நபராகவும் விளங்குகின்ற திலங்க சுமதிபால, பெரும்பாலும் சர்வதேச கிரிக்கட் சபையின் தலைவராக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இந்நிலையில், சர்வதேச கிரிக்கட் சபையின் தலைவராக திலங்க சுமதிபால நியமிக்கப்பட்டால், இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியிலிருந்து அவர் இராஜினாமாச் செய்யவேண்டும். எனினும், வெற்றிடமாகவுள்ள அப்பதவிக்கு பலர் போட்டியிடவுள்ள நிலையில், திலங்க சுமதிபாலவுக்கு நெருங்கிய ஒருவர் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவராக நியமிக்கப்படலாம் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## அகில இலங்கை சிறுவர் மெய்வல்லுனர் போட்டிகள் 25,30இல் நீர்கொழும்பு மற்றும் இரத்தினபுரியில்




பீ.எப்.எம் நிஷாட்

பாடசாலை மாணவர்களின் விளையாட்டு திறமையினை மேலும் விருத்தி செய்யும் நோக்கில் கல்வி அமைச்சினால் 2015ஆம் ஆண்டு முதத்தடவையாக நாடளாவிய அனைத்து பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்ட அகில இலங்கை சிறுவர் மெய்வல்லுனர் போட்டிகளின் (NESTLE KIDS ATHLETICS) குழு நிலைப் போட்டிகள் 3ஆவது முறையாகவும் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பூரண அனுசரணையுடன் எதிர்வரும் மார்ச் 25 மற்றும் 30ஆம் திகதிகளில் நீர்கொழும்பு மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.

மாணவர்களுக்கிடையில் ஒற்றுமை, குழு மனப்பான்மை, சகோதரத்துவம் உள்ளிட்ட விடயங்களை விருத்தி செய்யும் நோக்குடன் கனிஷ்ட மாணவர்களுக்காக நடத்தப்படும் இப்போட்டிகளில் தரம் 3 மற்றும் தரம் 4 மாணவ, மாணவிகள் மாத்திரம் கலந்துகொள்ளவுள்ளனர்.

கடந்த வருடம் நடைபெற்ற பாடசாலை மட்ட போட்டிகளின் பிறகு 222 கோட்ட மட்ட போட்டிகளும், 74 மாவட்ட மட்ட போட்டிகளும், 6 மாகாண மட்ட போட்டிகளும் நடைபெற்றுள்ளன.இதில் தெரிவான மாணவர்களுக்கான இறுதிப் போட்டிகள் 2 கட்டங்களாக நடைபெறவுள்ளதுடன், தரம் 3 மாணவர்களுக்கான இறுதிப்போட்டி எதிர்வரும் 25ஆம் திகதியும், தரம் 4 மாணவர்களுக்கான இறுதிப்போட்டி 30ஆம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இம்முறை தரம் 3 இற்கான போட்டிப் பிரிவில் 66 ஆண்கள் பாடசாலைகளும், 47 பெண்கள் பாடசாலைகளும் கலந்துகொள்ளவுள்ள அதேநேரம், தரம் 4 இற்கான போட்டிப் பிரிவில் 74 ஆண்கள் பாடசாலைகளும், 46 ஆண்கள் பாடசாலைகளும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய தேர்வு முறையின் மனநிலையில் பெற்றோர்கள், பிள்ளைகள் ஆசிரியர்கள் நடந்து கொள்வதால் பிள்ளைகளின் உள மற்றும் உடல் ரீதியிலான பாதிப்புக்குள்ளாகின்றார்கள் எனவும் எதிர்காலத்தில் இந்நிலைமையில் துரித மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை ஜய்க் ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்குமான சிறுவர் தடகள விளையாட்டுப் போட்டி பற்றி தெளிவுபடுத்தும் பத்திரிக்கையாளர் சந்திப்பில் மேற்படி கருத்தை அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி போட்டிகளின் முதற் கட்டமாக நடைபெறவுள்ள இறுதிப் போட்டி நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரியில் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசமின் தலைமையிலும், 30ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டிகள் இரத்தினபுரி பொது மைதானத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாரச்சியின் தலைமையிலும் நடைபெறவுள்ளதுடன், இதில் சுமார் 3000 மாணவ, மாணவிகள் கலந்துகொள்ளவுள்ளனர். குறித்த மெய்வல்லுனர் போட்டிகள் நாடாளவிய ரீதியில் நடத்துப்படுவது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் போட்டி ஏற்பாட்டாளரிடம் கேள்வி எழுப்புகையில், இதற்கான உரிய வேலைத் திட்டங்களை தற்போது ஆரம்பித்துள்ளோம்.ஆனால் நாட்டில் பெரும்பாலான பாடசாலைகளில் இந்த மெய்வல்லுனர் போட்டிகள் இடம் பெற்றுவருகின்றதாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டது.





மெரையின் சமுக நிறுவனம் ஒழுங்கு செய்த மென்பந்து கிரிக்கெட் போட்டி தெஹிவளை ஜயசிங்க மைதானத்தில் நேற்று முன்தினம் (21) நிறுவனத்தின் பணிப்பாளர்களான சண்றியா சப்ரி, சவுமி சப்ரி ஆகியோரின் தலைமைகளில் இடம்பெற்றது.நிகழ்விற்கு பிரதம அதிதியாக முஸ்லிம் கவுன்சில் மற்றும் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் நவமணிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான என்.எம் அமீன் கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதியாக சுயாதீன தொலைக்காட்சியின் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹாசிம் உமரும் கலந்து கொண்டு வெற்றிக் கேடயத்தை சுவீகரித்த மெரையின் கிரேண்ட் கழகத்தின் தலைவர் டி.அஸ்மானுக்கு வழங்குவதையும், அருகில் நிறுவனத்தின் பணிப்பாளர்களான சண்றியா சப்ரி, சவுமி சப்ரி மற்றும் மனித நேயன் இர்ஷாத் ஏ காதரையும் படத்தில் காணலாம். (ஏ.எஸ்.எம்.ஜாவித்)

## போர்னியோ எழுவர் றக்பி; சம்பியனானது இலங்கை



மலேசியாவில் நடைபெற்ற அணிக்கு எழுவர் கொண்ட போர்னியோ றக்பி தொடரின் மகளிர் பிரிவில் இலங்கை மகளிர் அணி முதல் முறையாக சம்பியன் பட்டத்தை வென்றது.இலங்கை மகளிர் அணி, இத்தொடரின் இறுதிப் போட்டியில் தாய்லாந்தை 12- 5 என்னும் புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது.

இத்தொடர் ஆரம்பித்த முதல் நாளில் ஆரம்ப கட்டத்திற்குரிய இரண்டு போட்டிகளில் முதற்தரமான ஆட்டத்தினை வெளிப்படுத்தியிருந்த இலங்கை மகளிர் அணி, அந்நாளில் சபாஹ் ஈக்கிள்ஸ் அணியை 48-00 எனவும், தாய்லாந்தை 26-0-5 எனவும் அபாரமாக வீழ்த்தியிருந்தது. அதனை அடுத்து, அரையிறுதிப் போட்டியில் மலேசிய மகளிர் அணிக்கு 29-05 என திகைப்பூட்டிய இலங்கை, இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. இறுதியில் தாய்லாந்தை வீழ்த்தி இலங்கை மகளிர் றக்பி அணி வரலாறு படைத்தது.

## வாழைத்தோட்ட அல் - ஹிக்மா பாராட்டுவிழாவும் பழைய மாணவர்கள் கௌரவிப்பும்



2 1/2 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 3 மாடி கட்டடம்









கொழும்பு - 12 வாழைத் தோட்டம், அல் ஹிக்மா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் கல்லூரிக்காக மூன்று மாடி கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டமை உட்பட கல்லூரியின் மேம்பாட்டை கருத்திற் கொண்டு கடந்த பல வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு செயற்பாடுகளை பாராட்டும் வகையில் பிரதேசத்தின் பள்ளிவாசலான அல் மஸ்ஜிதுன் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் இணைந்து ஏற்பாடு செய்த 'பாராட்டுவோம் பறைசாற்றுவோம்' என்ற நிகழ்வு கடந்த சனிக்கிழமை (18.03.2017) அல் ஹிக்மா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடனும் பழைய மாணவர்கள் மற்றும் தனவந்தர்களின் இரண்டு கோடி 30 இலட்சம் ரூபா நிதியுதவியுடனும் 13 வகுப்பறைகள் மற்றும் ஒரு கேட்போர் கூடத்தை கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடி கட்டிடமானது 2011ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை செயற்பட்டு வரும் நிறைவேற்று குழுவில் அங்கம் வகித்த மற்றும் வகிக்கின்ற அத்தனை உறுப்பினர்களின் முழுமையான பங்களிப்புக்களுடன் இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடதக்கது. இந்த காலகட்டத்தில் பழைய மாணவர் சங்கத்தில் அங்கம் வகித்த 38 பழைய மாணவர்களே கடந்த சனிக்கழமை ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் தேசகீர்த்தி அல்ஹாஜ் எஸ். எம். எம். இஸ்மத், தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்கா மற்றும் ஸ்ரீலங்கா

11ஆம் பக்கம் பார்க்க....

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 23RD MARCH 2017